பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 21, வியாழக்கிழமை 04.05.2017 | கதிர் 179

உங்கள் மனம் விரும்பும்
வேலைவாய்ப்பை
உடன் பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
Fb : winstarjob bank
021 320 2789
(அ/400)

### 23,24,25,26 ஆம் திகதிகளில் பணியை மும்முரப்படுத்தி

# அரசமைப்பு வழிகாட்டல் குழு தொடர்ந்து 'மரதன்' அமர்வு!

## 4 நாள்களில் 5 வேளைகள் கூடும்

கொழும்பு, மே 04

அரசமைப்பு கவுன்ஸிலின் வழிகாட்டல் குழு தனது நடவடிக்கைகளை மும்மு ரப்படுத்திப் பணிகளை விரைந்து பூர்த்தி செய்வதற்காக எதிர்வரும் 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தொடர்ந்து ஐந்து 'மரதன்' அமர்வுகளை நடத்துவதற் குத் தீர்மானித்திருக்கின்றது.

நேற்று நடைபெற்ற அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் கூட் டத்தில் இது குறித் துத் தீர்மானிக்கப்பட்டது.

வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கைக்கான நகல் வரைவு நேற்றைய கூட்டத்தில் உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பக்கம் 18 >>>

## தங்க நகைப் புதையல் தேடி ஆனந்தபுரத்தில் அகழ்வு வேலை



போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகளால் ஆனந்த புரம் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் தங்க நகைகளைத் தோண்டியெடுப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய நேற்றுப் பிற்பகல் இந்தப் பகுதியில் பொலிஸார் அகழ்வுப் பணிகளை ஆரம்பித்துள்ளனர். சம்பவ இடத்திற்கு முல்லைத்தீவு நீதி மன்ற நீதிவான் நேரில் சென்றிருந்தார்.

## வாயைக் கறுப்புத் துணியால் கட்டி ஊடகவியலாளர்கள் கவனவீர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டில் ஊடக சுதந்திரத்தை ஏற்படுத்த வலியுறுத்தி யாழ்.நகரப் பகுதி யில் உள்ள பிரதான பஸ் நிலை யம் முன்பாக அடையாளப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பக்கம் 18 >>>

## சஜினுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயண தடை நீக்கப்பட்டது



முன்னாள் நாடாளு மன்றஉறுப் பினர் சஜின் வாஸ் குண வர்த்தனவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு

பக்கம் 18 >>>

## குற்றம் நிரூபிக்கப்படும் அமைச்சர்களை முதலமைச்சர் பதவி நீக்க வேண்டும்!

### மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண அமைச்சர் கள் மீதான விசாரணை அறிக்கை இந்த வாரத்திற்குள் வெளியிடப்பட இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அந்த அறிக்கையில் - விசாரணை

பக்கம் 18 >>>

## நாமலுக்கு அழைப்பாணை



கொழும்பு, மே 04

நிதிச் சலவைச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு ஒன்று தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகுமாறு நாடாளுமன்ற

பக்கம் 18 >>>

## இளம் ஆசிரியரின் காதல் விருப்பால் அனலைதீவில் கற்றல் - கற்பித்தல் பாதிப்பு!

அனலைதீவு, மே 04

ஆங்கிலம் கற்பிக்கும் இளம் ஆசிரியர் ஒருவர் ஜி.சீ.ஈ. சாதா ரண தரம் படிக்கும் மாணவி ஒருவரிடம் தனது காதலைத் தெரிவித்தாராம். அதனால் ஏற்பட்ட குழப்பத்தால் நேற்று அனலைதீவுப் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளிலும்

பக்கம் 18 >>>

## சுன்னாகம் சித்திரவதை, கொலை வழக்கு: 6 பொலிஸாருக்கும் 10 ஆண்டுக் கடூழியம்!

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடந்த 2011.11.25 அன்று குற்றச்சாட்டு சம்பவமொன்றில் கைது செய் யப்பட்ட சந்தேகநபரான சிறி கந்தராசா சுமணன் என்பவ ரைச் சித்திரவதை செய்து

பக்கம் 18 >>>

## எம்.பி. பதவியை இழந்தார் நடிகை கீதா குமாரசிங்க

### அந்த இடத்துக்கு பியசேன கமகே





கொழும்பு, மே 04

பொதுமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னராகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த நடிகை கீதாகுமாரசிங்க; சுவிஸ், இலங்கை ஆகிய இரு

பக்கம் 18 >>>

## கூட்டுப்படைத் தளபதியாக பொன்சேகாவா? அப்படி எந்தமுடிவும் இல்லை என்கிறார் ரணில்!

அமைச்சர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவைக் கூட்டுப்படை களின் தளபதியாக நியமிப்பது தொடர்பில் அமைச்சரவையில் எந்தத் தீர்மானமும் முன்னெ டுக்கப்படவில்லை என நாடாளு மன்றில் பிரதமர் ரணில் விக்கி

பக்கம் 18 >>>

## அளப்பு அருணாசலம்



மரதன் ஓட்டம் தொடங்கினம்...
ஓடி முடிப்பினமோ...?

## வலிகாமம் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு மீண்டும் சந்திரராஜா

### உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு, மே 04

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இடம் மாற்றம் செய்யப்பட்ட செல்வரட்ணம் சந்திரராஜாவை உடனடியாக நடைமுறைக்குவரத்தக்க விதத் தில் மீண்டும் வலிகாமம் கல்விப்

பக்கம் 18 >>>

## காங்கேசன் துறைமுக சீரமைப்புக்கு இந்திய 'எக்ஸிம்' வங்கி கடன் உதவி

காங்கேசன்துறை துறை முகத்தை மறுசீரமைப்பதற்காக சுமார் நாலரைக் கோடி அமெ ரிக்க டொலர் (சுமார் எழுநூறு கோடி ரூபா) இலகு கடன் உத

பக்கம் 18 >>>

# பொன்சேகா தலைமையிலேயே அத்தியாவசிய சேவை செயலணி!

## மாற்றம் இல்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 04

பொன்சேகா தலைமையிலான அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்கும் செயலணி நிறுவப் படும் முடிவில் மாற்றம் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பேசப்பட்ட, சரத் பொன்சேகா விவகாரம் நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பெரும் புயலைக் கிளப்பியது.

''அரசியல் நோக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் போது மக்களுக்கான அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பதற்காக அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிய செயலணியை நிறுவ வேண்டும்.

இது கட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் எடுக்கப்படும் முடிவு அல்ல. தேசிய அரசையும், மக்களையும் பாதுகாக்கும் நோக்கில் எடுக்கப்படுகின்ற முடிவாகும்.

சரத் பொன்சேகாவுக்கு கூட்டுப் படைகளின் தளபதியாக நியமிப்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. அவரை அத்தியாவசிய சேவையை முன்னெடுக்கும் செய லணிக்குப் பொறுப்பாக நியமிப்பது பற்றியே பேசப்பட்டது.

அமைச்சரவையில் பேசப்படும் விடயங்களை வெளியில் பேசும்போது அமைச்சர்கள் பொறுப்பாகச் செயற்பட வேண்டும்'' என்று ஜனாதிபதி அமைச்சர்களைக் கடிந்து கொண்டார் என்று தெரிய வருகின்றது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தற்போது அமைச்சராகவுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கூட்டுப் படைத் தளபதியாக நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர்.

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன, சரத் பொன்சேகாவை சிறப்புச் செயலணியின் தலைவராக நியமித்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.



அமைச்சரவையில் பேசப்பட்ட விடயம் தொடர்பில் மாறிமாறி தகவல்கள் அமைச்சர்களால் வெளி யிடப்பட்டமையாலேயே, ஜனாதிபதி இவ்வாறு கடிந்துகொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


## படகு விபத்தில் காணாமற்போன படை அதிகாரி எங்கே?!

மன்னார்- அரிப்பு கடல் பகுதியில் இலங்கைக் கடற்படைப் படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்படை அதிகாரி ஒருவர் காணாமற்போயுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த 30ஆம் திகதி இரவு இடம்பெற்றது என, இலங்கைக் கடற்படை பதில் பேச்சாளர் ருவான் பிரேமவீர தெரிவித்துள்ளார்.

எஸ்.எல்.என்.எஸ். ரத்னதீப தளத்தில் இருந்து, லெப். விஜேசிங்க என்ற அதிகாரியும், மூன்று கடற்படையினரும் சிறிய படகு ஒன்றில் சந்தேகத்துக்குரிய படகு ஒன்றைச் சோதனையிடச் சென்றபோதே, இந்த விபத்து இடம்பெற்றது.

கடற்படைப் படகு கவிழ்ந்த சம்பவத்தில் மூன்று கடற்படையினர் காயங்கள் ஏதுமின்றித் தப்பினர். எனினும், லெப். விஜேசிங்க இந்தச் சம்பவத்தில் காணாமற் போயுள்ளார்.



மன்னார் கீரி கடற்கரையில் சுமார் 36 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவக்தி ஆனந்தன், மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் உட்பட வடக்கு மாகாணசபையின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். முதலமைச்சரின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து இந்தச் சுற்றுலா மையம் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-112)

## பிரான்ஸ் நாட்டின் அபிவிருத்தி நிறுவனம் விரைவில் இலங்கையில்!

கொழும்பு, மே 04

பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் ஒன்று இலங்கையில் அமைக்கப்பட உள்ளது.

இந்த அலுவலகத்துக்கு இராஜதந்திர வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிரான்ஸ் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்காக அன்பளிப்பு கொள்கையைச் செயற்படுத்தும் இந்த நிறுவனம், உலகம் முழுவதும் 60 நாடுகளுக்கு தனது சேவையை வழங்கி வருகின்றது.

இந்த நிறுவனம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த நிறுவனம் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (எ)

## வவுனியா அரிசி ஆலையில் 160 நெல்மூடைகள் திருட்டு

வவுனியா, மே 04

வவுனியாவிலுள்ள அரிசி ஆலையொன்றில் இருந்து 160 நெல் மூடைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் அரிசி ஆலையின் உரிமையாளரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

இலுப்பைக்குளம் பகுதியிலுள்ள அரிசி ஆலை ஒன்றில் கடந்த 23ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிக்கு உட்பட்ட காலப் பகுதியில் 160 நெல் மூடைகளும், 6 குறுணல் மூடைகளும் திருட்டுப் போயுள்ளன என்று அரிசி ஆலை உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதையடுத்து பொலிஸார் அரிசி ஆலையில் கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கைது செய்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அவரையும், மேலும் ஒரு வரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளனர்.

இந்தநிலையில், அவர்களிடமிருந்து சில நெல் மூடைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

## மத்திய வங்கியின் ஆண்டறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு



கொழும்பு, மே 04

இலங்கை மத்திய வங்கியின் 2016 ஆண்டு அறிக்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முற்பகல் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. இதன் போது மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி பீ.என்.வீரசிங்க, உதவி ஆளுநர் கே.எம்.எம். சிறிவர்தன, மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளர் கலாநிதி வை.இந்துரத்ன ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். (எ)

## முள்ளி முதல் வரணி வரையான பகுதியில் காடு அழிப்பதற்குத் தடை!

வடமராட்சியூடாக முள்ளிப்பகுதியில் இருந்து வரணி செல்லும் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரம் வெட்டுதல், பாதை இடுதல், வேட்டையாடுதல், கழிவுப் பொருள்களை கொட்டுதல் போன்ற செயற்பாடுகள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இந்தப் பிரதேசங்களில் எந்தவிதக் கட்டுப்பாடுகளுமற்ற நிலையில் பொதுமக்கள் மற்றும் விறகு வியாபாரிகள் தாம் நினைத்த படி வனப்பிரதேசத்தை அழித்து வந்தனர்.

தற்போது அரசால் தடை விதிக்கப்பட்டதை சமூக ஆர்வலர்களும் நலன்விரும்பிகளும் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

இத்தடை உத்தரவு தொடர்ந்து இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்னும் சில ஆண்டுகளில் எதிர்கால சந்ததியினருக்கு பயன்தரக்கூடிய மரங்கள் மற்றும் வளங்கள் கிடைக்க பெரும் உதவியாக இருக்குமெனவும் ஜீவராசிகளின் இழப்புக்களும் தவிர்க்கப்படும் என்று சமூக நலன் விரும்பிகள் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-25)

# முன்னர் ஆளுநர் ஆட்சியில் செய்தவற்றை விட புதிதாக எதைச் செய்தது வட மாகாண சபை?

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேள்வி

ஆளுநர் ஆட்சியில் இருந்ததை விட தற்போது என்ன மாற்றத்தை வடமாகாணம் கண்டிருக்கின்றது? வடமாகாணத்தில் என்ன அபிவிருத்தி நடந்திருக்கிறது? - இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கும் வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா வடமாகாண சபை அபிவிருத்திக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் தவறவிட்டிருக்கின்றது எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னைய காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவையும் ஆளுநரையும் குற்றஞ்சாட்டி எதனையும் செய்யாது ம்ாகாணசபை இருந்தபோதும், இன்று அவர்கள் இல்லாத நிலையிலும் மாகாண சபை எதனையும் செய்யாது வெறுமனே பிரேரணைகளை நிறைவேற்றும் சபையாக மட்டுமே காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் மூன்றரைவருடச்செயற்பாடுகள் தொடர்பாக நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு :-

வடமாகாணம் ஆளுநருடைய ஆட்சியில் இருந்த போது நடந்த அபிவிருத்தி மற்றும் வளர்சியை விட தற்போது என்ன மாற்றத்தைக் கண்டிருக்கின்றது? வடமாகாணத்தில் 32 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் உள்ளனர். அவர்களைக்கொண்டு மாகாணம் அபிவிருத்திசெய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் கல்வியில் 9ஆம் இடத்தில், அபிவிருத்தியில் 9ஆம் இடத்தில் என கடைசி நிலையிலேயே வடமாகாணம் இருக்கின்றது.

குறைந்த பட்சம் ஆசிரியர்களைக் கூட சரியாகப் பங்கிடத் தெரியாத நிலையில் வடமாகாணசபை உள்ளது. அண்மையில் 450 வரையான பட்டதாரி ஆசிரியர்கள் சேவையில் உள்வாங்கப்பட்டனர். அவர்களில் 100 வரையான ஆசிரியர்கள் கஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றாமல் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்கு அருகில் வந்துள்ளனர்.

அதேபோல் கழிவுகளை முகாமை செய்வதற்கும் கூட இயலாத நிலையே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திற்கு இந்தியப் பிரதமர் மோடி வந்தபோது யாழ். மாநகரத்தை தூய்மையாக்குங்கள் எனக் கேட்டேன். அதற்கு எனக்கு வழங்கப்பட்ட பதில் 'அவர் எந்த வீதி வழியாக வருகிறார் என்பது தெரியாது. அது தெரிந்தால் செய்யலாம்' - என்பதே. இப்போது இந்திய பிரதமர் மீண்டும் வரப்போகிறார். ஆனால் மாநகரம் மீண்டும் கழிவுகளால் நிரம்பியே காணப்படுகின்றது.

எனவே வடமாகாணசபை செய்ய வேண்டிய விடயங்களைக் கூட செய்யாமல் விட்டிருக்கின்றது. குறிப்பாக வடமாகாண சபைக்கு அரசமைப்பின் ஊடாக 35 விடயங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நியதிச் சட்டங்களை உருவாக்க வேண்டும். அவற்றைக் கூட இந்த மாகாண சபை செய்திருக்கவில்லை.

குறைந்தது 300 நியதிச்சட்டங்களை மாகாணசபை உருவாக்கியிருக்கவேண்டும். ஆனால் 4 அல்லது 5 நியதிச் சட்டங்களையே உருவாக்கியிருக்கின்றார்கள். அதனால் மாகாணசபையினால் வினைத்திறனாகச் செயற்பட முடியாத நிலை காணப்படுகின்றது.

அரசு வழங்கும் மிக சொற்பமான நிதியைத் தவிர, இந்த மாகாணசபை வேறு எந்த நிதியைப் பெற்றிருக்கின்றது?

சுகாதார அமைச்சு மட்டும் அரசு வழங்கும் நிதிக்கு மேலதிகமாக சுமார் 9 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை பெற்று மக்களுக்கு பயன்படுத்தியுள்ளது. கடந்த மாதம் 20 ஆம் திகதி புலம்பெயர்தமிழர்களை ஒன்றிணைத்து முதலீடு சம்பந்தமான மாநாடு ஒன்று கொழும்பில் நடைபெற்றது.

அந்த மாநாடு தொடர்பாக நான் முதலமைச்சரிடம் கேட்ட போது அதற்கான அழைப்பு கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது. ஆனால் கடந்த மாதம் 4 ஆம் திகதியே முதலமைச்சருக்கு அந்த அழைப்பிதழ் அனுப்பப்பட்டுவிட்டது. இதே போல் 2 ஆயிரத்து 500 கோடியே ரூபா பெறுமதியான இரணைமடு-யாழ்ப்பாணம் நீர் திட்டத்தை நிராகரித்தவர்கள் இதுவரை அதற்காக வழங்கிய மாற்றுத் திட்டம் என்ன?

மேலும் 360 வரையான தீர்மானங்களை வடமாகாணசபை நிறைவேற்றியுள்ளது.

அவற்றினால் எந்தப் பயனும் கிடையாது. தீர்மானங்கள் சட்ட வலுவற்றவை. மேலும் நியதிச்சட்டங்களை இயற்றி அவற்றுக்கான உப விதிகளையும் உருவாக்கவேண்டும். அவ்வாறு இயற்றப்படவில்லை. இதனால் எவராவது வழக்குத் தொடர்ந்தால் மாகாண சபையின் செயற்பாடுகளை முழுமையாக முடக்க இயலும். - என்றார்.

# மஹிந்தரின் பாதுகாப்பு திடீரெனக் குறைப்பு!

## 42 பொலிஸார் விலக்கப்பட்டனர்

கொழும்பு, மே 04

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பை கணிசமான அளவு குறைப்பதற்கான திடீர்த் தீர்மானம் ஒன்று அரச உயர் மட்டத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகப் பரபரப்புத் தகவல் நேற்று மாலை கொழும்பில் வெளியானது.

கொழும்பு காலி முகத் திடலில் அவரது கூட்டு எதிரணி வெற்றிகரமான மேதினக் கூட்டத்தை நடத்தி முடித்தமையை அடுத்தே இந்தத் தீர்மானம் அரச உயர் வட்டாரத்தில் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து மஹிந்த ராஜபக்ஷவின் உதவியாளர்களுடன் 'காலைக் கதிர்' நேற்றிரவு தொடர்பு கொண்டு கேட்ட போது -

"அப்படிச் செய்திகள் அடிபடுகின்றன. அவரின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்புப் பிரிவினரில் 42 பேர் மாற்று ஒழுங்குகள் எதுவும் செய்யப்படாமலேயே மேலிட உத்தரவுக்கமையத் திடீரென விலக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை மட்டும் இப்போதைக்கு எங்களால் உறுதிப்படுத்த முடியும்." - என்று அவர்கள் தெரிவித்தனர்.

எனினும், இந்த 42 பொலிஸார் போக மிகுதியாக உள்ள பாதுகாவலர்களின் எண்ணிக்கை விவரத்தை வெளியிட அவர்கள் மறுத்துவிட்டனர். (உ)

# மஹிந்தருக்கு ஏதும் நேர்ந்தால் முழு நாடுமே கொந்தளிக்குமாம்!

மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமல்ல, அவருடைய மயிரிழைக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டது என்றாலும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் வீதிக்கு இறங்குவார்கள் என கெலும் பிரியங்கர என்பவர் தெரிவித்துள்ளார்.

இவர் மஹிந்த தரப்பிற்கு முக்கியமான நபர் எனவும், நாமல் ராஜபக்ஷவின் முக்கிய நண்பர்களில் ஒருவர் எனவும் கூறப் படுகின்றது.

அத்துடன் மஹிந்த தரப்பின் முக்கிய கூட்டங்கள் போன்றவை இவருடைய முகநூல் பக்கத்தின் ஊடாக நேரலையாக வெளியிடப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேரலையில் அவர் தெரிவித்துள்ள கருத்துகள் தொடர்பில் பரவலாக விமர்சிக் கப்படுகின்றது. நேரலையில் அவர் கூறிய விடயங்கள் வருமாறு :-

மேதினக்கூட்டத்தின்பின்னர் மஹிந்த மீதான பயம் அதிகரித்து விட்டது. அவருடைய பாதுகாப்பிற்காக இருந்த 42 பொலிஸ் அதிகாரிகள் விலக்கப்பட்டுள்ளனர். எனத் தகவல் கிடைத்துள்ளது.

அதேபோன்று மஹிந்தவைக் கைது செய்யவும், அடுத்து பஸில் ராஜபக்ஷவையும், நாமலையும் கைது செய்யவும் திட்டம் தீட்டப் பட்டுள்ளது. மஹிந்த மட்டுமே இந்த நாட்டின் தலைசிறந்த தலைவராவார். அவரைத் தற்போது முற்றாக அடக்கி விட அரசு சதி செய்து வருகின்றது.

அவரைப் புலம்பெயர் தமிழர்களிடம் ஒப்படைக்கவும் அரசு ஆயத்தமாகி வருகின்றது. அவருக்கு ஏது நடந்தாலும் மைத்திரி, ரணில் மட்டுமல்லாது நல்லாட்சியே பதில் கூற வேண்டும்.

ஆனால் மஹிந்தவைப் பாதுகாத்து வந்த 42 பொலிஸ் அதிகாரிகளை விலக்கினாலும் அவரைக் காப்பாற்றுவதற்கு இலட்சக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் ஒன்று திரளுவார்கள்.

அவரது உயிருக்கு ஏதாவது ஆபத்து என்றாலோ அல்லது அவருடைய மயிரிழைக்கு ஆபத்து என்றாலோ பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டோம் நாடே கொந்தளிக்கும். - என்றார் அவர்.

### 5 மாணவர்கள் உட்பட 11 பேர் கடத்தி காணாமலாக்கப்பட்ட சம்பவம்

# பிரதான சந்தேக நபரான கடற்படை அதிகாரி கடல் மார்க்கமாக நாட்டைவிட்டுத் தப்பி ஓட்டம்?

கொழும்பு, மே 04

கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர் பகுதிகளில் இருந்து வெள்ளைவானில் கடத்திச்செல்லப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்ட சம்பவத்தில், கடத்தப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த திருமலை கன்சைட் சித்திரவதைக் கூடத்தில் படுகொலைகள் இடம் பெற்றுள்ளமை வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

அதன்பிரகாரமே இந்தக்கடத்தல் மற்றும் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியோருக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் எந்தப் பழிவாங்கல்களும் நோக்கங்களும் கிடையாது எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்பு விசாரணை அதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த சில்வா நேற்று கோட்டை நீதிவானுக்கு அறிவித்தார்.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதிகளில் இருந்து வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்ட 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரின் கடத்தல் விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று மீளவும் கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது, கைது செய்யப்பட்டுள்ள ஐந்து சந்தேக நபர்களில் மூவர் சார்பில் நீதிவானிடம் முறையிடப்பட்டது. தாம் பழிவாங்கப்படுகின்றனர் எனவும், தமக்கு எதிராகக் கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பில் வழக்குத் தொடுக்க எந்த ஆதாரமும் இல்லை எனவும் நீதிவானிடம் குறிப்பிடப்பட்டது.

அதற்குப் பதிலளிக்கும் விதமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த சில்வா மேற்படி பதிலை வழங்கினார்.

அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர் ஹெட்டியாராய்ச்சி கடற்படைத் தலைமையகத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் சட்டபூர்வமாக வெளிநாடு செல்லவில்லை என்பதை உறுதி செய்துள்ள நிலையில் சட்ட விரோதமாக வெளி நாடொன்றுக்கு அவர் கடல் மார்க்கமாகச் சென்றிருக்கலாம் எனத் தாங்கள் சந்தேகிக்கிறார்கள் எனவும் அது தொடர்பில் உறுதிசெய்ய பூரண விசாரணை இடம்பெறுவதாகவும் அவர் நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் தெரிவித்தார்.

இதனிடையே இந்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான லெப்டினன்ட் கொமாண்டர் சம்பத் முனசிங்க கைதாகி பிணையில் உள்ள நிலையில், மற்றைய பிரதான சந்தேக நபரான லெப்டினன்ட் கொமாண்டர் ஹெட்டியாராய்ச்சி தேடப்படும் சூழலில் அவர்களின் கீழ் பணியாற்றிய இரு கடற்படை வீரர்களான - இறுதியாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட - நான்காவது மற்றும் ஐந்தாவது சந்தேக நபர்களான நளின் பிரசன்ன விக்ரமசூரிய, தம்மிக தர்மதாஸ ஆகியோர் நேற்று அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்தப்பட்டனர். எனினும் அவர்களை அடையாளம் காட்ட சாட்சியாளர்களால் முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# சரா எம்.பியின் இந்திய எதிர்ப்புக் கருத்து; கூட்டமைப்பின் கூட்டத்திலும் எதிரொலிப்பு!

கொழும்பு, மே 04

இந்தியாவையும், இந்தியத் தூதரக அதிகாரிகளையும் கடுமையாகச் சாடும் விதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று முன்தினம் வெளியிட்டவை எனக் கூறப்படும் கருத்துக்கள், கூட்டமைப்பின் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் எதிரொலித்தது.

எனினும் அந்தக் கூட்டத்தில் சரவணபவன் எம்.பி. கலந்து கொண்டிருக்கவில்லை.

கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு எதிர்க்கட்சித்தலைவரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் நேற்றுக் கூடியது. பதினொரு உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அச்சமயம், சராவின் பேச்சுக் குறித்து கூட்டமைப்பு பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

சரவணபவன் எம்.பியின் ஊடகமான 'சுடர்ஒளி' நாளிதழில், இந்தியத் தரப்புக் குறித்து சரவணபவன் கூறியவை எனத் தெரிவித்து வெளியான தகவல்களை சுமந்திரன் சுட்டிக் காட்டிக் கருத்து வெளியிட்டார் எனத் தெரிகின்றது.

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்குப் பத்து நாள்களே இருக்கையில் இத்தகைய கருத்து வெளிப்பாடு பொருத்தமற்றது என்ற சாரப்பட சுமந்திரன் தெரிவித்தார் என அறியவந்தது.

எனினும், இந்த விவகாரம் குறித்து அந்தக் கூட்டத்தில் எந்தத் தீர்மானமோ, முடிவோ எடுக்கப்படவில்லை.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்தும் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகவும் அறியவந்தது. (உ)

# வித்தியா கொலை: சந்தேக நபர்களின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், மே 04

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள பத்து சந்தேக நபர்களினதும் விளக்கமறியல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

மேற்படி பத்துப் பேரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.எம். றிஸ்வி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இந்த உத்தரவை நீதிவான் விடுத்தார். (உ)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


# கூட்டு எதிரணி மீது நடவடிக்கை எடுக்க சு.கவினால் இயலாது!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்கட்சியின் கண்டி கெட்டம்பே மைதானத்தில் நடத்திய மே தின நிகழ்வில் பங்குபற்றாமல் தவிர்த்துவிட்டு, வேறு மே தின நிகழ்வுகளில் பங்குபற்றினால், அவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க உட்பட பல மூத்த தலைவர்கள் மே தினத் துக்கு முன்னிருந்து பல தடவைகள் எச்சரித்து அறிவிப்பு வெளி யிட்டு வந்தனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அங்கம் வகிக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சு.க. வேட்பாளர்களாகப் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய பின்னர், சு.கவைப் புறம் ஒதுக்கவிட்டு, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணிப் பக்கம் நிற்கும் எம்.பிக்கள் தொடர்பிலேயே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இப்படி கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சு.க. தலைமைப்பீடம் தனது எம்.பிக்களை மிரட்டுவது இது முதல் தடவையல்ல.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது சு.க. வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக - எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராக - போட்டியிட்டு, அத்தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், சு.க. தலைமைப் பதவியை ஜனாதிபதி என்ற அதிகாரத்துடன் மைத்திரிபால சிறிசேன சுவீகரித்துக் கொண்ட நாளிலிருந்து இதுதான் கதை.

சு.கவுக்கு எதிர்த் தரப்பில் - கூட்டு எதிரணிப் பக்கம் - சாய்ந்து கொண்டு செயற்படும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அனைத்து சு.கவின் எம்.பிக்களுக்கும், சு.கவின் தலைமைப்பீடம் இப்படிப் பல தடவைகள் 'ஒழுக்காற்று நடவடிக்கை' மிரட்டலை விடுத்தே வந்துள்ளது. ஆனால், அந்த அச்சுறுத்தல் ஏதும் அவர்களிடம் எடுபடவேயில்லை.

'ஒழுக்காற்று மிரட்டலை' விடுக்கும் சு.க. தலைமையால் அதைச் செய்யவே முடியாது - இயலாது - என்பதுதான் வேதனை கலந்த உண்மையாகும்.

நடக்கவே முடியாத முடவன் ஒருவன் வீட்டுத் திண்ணையில் சிறிய தடியுடன் அமர்ந்திருந்து கொண்டு வீதியில் நடமாடுவோரைப் பார்த்து 'எழுந்து வந்தால் நல்ல பூசை தருவேன்' என்று மிரட்டுவது மாதிரித்தான் தன்னால் செய்ய இயலாத ஒரு காரியத்தைக் குறிப்பிட்டு சு.க. அதிருப்தியாளர்களை மிரட்டுகின்றது சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம்.

சு.கவை மீறி, கூட்டு எதிரணியில் செயற்படும் தனது எம்.பிக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் கட்சியை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை சு.க. தலைமைப்பீடம் எடுக்கலாம்.

அப்படி சு.க. தலைமைப்பீடம் ஒரு முடிவை எடுத்தால், அந்த எம்.பிக்கள், தமது கட்சியில் இனிமேல் இல்லை என்றும், அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து அகற்றுமாறும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடாக நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு சு.க. அறிவிக்க வேண்டும்.

அப்படி ஓர் அறிவிப்பை நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பிய பின்னர், சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமது கட்சியைச் சேர்ந்தவர் என சு.க. உரிமை கோரமுடியாது.

ஆனால், நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட மேற்படி கடிதத்தை ஆட்சேபித்து, சம்பந்தப்பட்ட எம்.பி. அல்லது எம்.பிக்கள் நீதிமன்றத்துக்குச் சென்றால், நாடாளுமன்றச் செயலாளருக்கு சு.கவின் சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஊடாக அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் நடவடிக்கைகளை எடுப்பதை விசாரணை முடியும் வரை நீதிமன்றம் தடுத்து - இடைநிறுத்தி - வைக்கும். அதாவது, வழக்கு விசாரணை முடியும் வரை சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பர். ஆனால், அவர்களை தமது கட்சி உறுப்பினர் என்று சு.க.கோரமுடியாது. அத்தகைய சூழல் வந்தால் அந்த எம்.பிக்களை சு.க. அல்லாத தனிக்கட்சியினராக அல்லது தனித்தனி நாடாளுமன்ற உறுப்பினர்களாகக் கருத வேண்டிய இக்கட்டு சபாநாயகருக்கு ஏற்படும்.

சு.க. இப்போது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் - கூட்டு எதிரணியின் மேதினத்தில் கலந்துகொண்ட - சுமார் மூன்று டசின் சு.க.வின் எம்.பிக்களுக்கு - எதிராக அதனைச் செய்ய வேண்டியிருக்கும்.

அப்படி நடவடிக்கை எடுத்து, அவர்களை நாடாளுமன்றத்தில் சு.க. அல்லாத தனிக்கட்சியினர் என்ற அங்கீகாரத்தை வழங்கும் விதத்தில் வெளியில் விட்டால், தற்போது தனது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களின் ஆதரவுடன் எதிர்க்கட்சித் தலைவராகியிருக்கும் சம்பந்தனின் பதவிக்கு அதோ கதிதான்.

எதிரணியில் - சட்டரீதியாக - இரண்டு, மூன்று டசின் எம்.பிக்களை கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைவராகிவிடுவார்.

ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராக்கி, தற்போதைய அரசியல் நிலைமைகளைத் தனக்கு எதிராக மாற்றிக்கொள்ள சு.க. தலைமை முன்வரவே வராது.

வேண்டுமானால் தனது திருப்திக்கு எம்.பிக்கள் அல்லாத சு.கவின் கட்சிப் பதவிகளில் இருந்து - தொகுதி அமைப்பாளர் போன்ற பதவி நிலைகளில் இருந்து - கூட்டு எதிரணி உறுப்பினர்களை சு.க. வெளியேற்றலாம். அவ்வளவே.

# மத்திய கலாசார நிதிய ஊழியர்கள் 1,660 பேருக்கு நிரந்தர நியமனம்



## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, மே 04

மத்திய கலாசார நிதியத்தில் ஊழியர்களாக பணியாற்றிய ஆயிரத்து 660 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலானோர் மனிதவள நிறுவனத்தின் ஊடாக சேவைக்கு இணைத்துக் கொண்டவர்களாவர்.

இந்த ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் 500 ரூபா பணம் அந்த நிறுவனத்தால் நியாயமற்ற முறையில் பெற்றுக் கொள்ளப்பட்டது என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதனால் அந்த நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திக் கொள்வதற்கு மத்திய கலாசார நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிறுவனத்தின் கீழ் பணியாற்றிய ஊழியர்களில் எதிர்பார்க்கப்படும் தகுதிகளைக் கொண்ட ஊழியர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அமைச்சரின் பணிப்புரைக்கமைய அவர்கள், இம்மாதம் முதல் நிரந்தர சேவையில் நிரந்தர ஊழியர்களாக மத்திய கலாசார நிதியத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ)

# இலங்கைக்கு வந்த பாகிஸ்தான் கப்பல்



கொழும்பு, மே 04

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு, பாகிஸ்தானிய கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

'டாஸ்ட்' என்ற பாகிஸ்தானிய கடற்படைக் கப்பலே நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இது எதிர்வரும் சனிக்கிழமைவரை தங்கி நிற்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல நிகழ்வுகளில் அந்தக் கப்பலில் தங்கியுள்ள வீரர்கள் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# வெளிநாட்டு நாணயங்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே 04

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங்களை நாட்டிலிருந்து கொண்டு செல்ல முயன்ற ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்குறணைப் பகுதியைச் சேர்ந்த 59 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து 139 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று சுங்கத்துறை ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹதவ தெரிவித்துள்ளார்.

தனது பயணப் பொதியில் மிக சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து சிங்கப்பூருக்கு பணத்தைக் கொண்டு செல்ல முயன்ற போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ)

# இலங்கை-இந்தியா இடையேயான மருத்துவத்துறை ஒப்பந்தத்துக்கு அனுமதி

கொழும்பு, மே 04

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாரம்பரிய மருத்துவ முறைகளை பரிமாறிக் கொள்ளும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தொடர்பான சுகாதார அமைச்சரின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில், பாரம்பரிய மருத்துவ முறைகள் மற்றும் ஹோமியோபதி துறையுடன் சம்பந்தப்பட்ட அறிவு மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை பரிமாறிக் கொள்ளுதல், அந்தத்துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை விருத்தி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவுள்ளது. (எ)

# களுத்துறை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு, மே 04

களுத்துறைப் பகுதியில் சிறைச்சாலை பஸ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணை அறிக்கை இன்று கையளிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, இன்று பிற்பகல் 3 மணியளவில் புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் அமைச்சரிடம் இந்த அறிக்கை வழங்கப்படும் என்று அந்தக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி காலை சிறைச்சாலை பஸ் மீது களுத்துறைப் பகுதியில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது முக்கிய சந்தேகநபரான சமயங் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் உள்ளிட்ட ஏழு பேர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் ஆராய, ரூமி மர்சூக் தலைமையில் மூவரடங்கிய குழு ஒன்று, புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாளை

05.05.2017
வெள்ளிக்கிழமை


நட்சத்திரம் : மகம் மு.ப 8.55 வரை
திதி : தசமி மு.இ 11.22 வரை

சுபநேரம் : 5.56 - 7.26 வரை
இராகுகாலம் : 10.29 - 11.56 வரை


காலைக்கதிர் Kalaikathir












மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தால் அதன் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையில் தொழிலாளர் தினக்கூட்டம் இடம்பெற்றபோது பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். அருட்பணி ஜெகதாஸ், மக்கள் காதர், காணாமற் போன உறவுகளின் ஒன்றியத் தலைவி உட்படப் பலர் உரையாற்றுகின்றமையை காணலாம்.

(இ - 112)

# மூன்று புதல்வர்கள் இருக்கும்வரை மஹிந்தவை எதுவும் செய்யமுடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் காட்டம்



கொழும்பு, மே 04

மூன்று புதல்வர்கள் இருக்கும் வரை மஹிந்த ராஜபக்ஷவை ஒன்றும் செய்ய முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டு எதிர்க் கட்சியின் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சரத் பொன்சேகா, மஹிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்க போவதாகத் தெரிவித்திருந்தார். அவரின் அந்தக் கருத்து மஹிந்த மீது அவர் கொண்டிருந்த வெறுப்பைக் காட்டுகின்றது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவும் அதேபோல் ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். ஆனால், மஹிந்தவின் புதல்வர்களாகிய நாம் மூவரும் இருக்கும் வரை அவரை ஒன்றும் செய்துவிட முடியாது.

புதல்வர்கள் மட்டுமல்லாது அவருக்குப் பின்னால் லட்சக் கணக்கான மக்களும் இருக்கின்றார்கள். அவர்களைத் தாண்டி மஹிந்தவைத் தண்டிப்பது சாத்தியமற்றது.

காலிமுகத்திடலின் மே தினக் கூட்டம் ஆட்சிக்கு எதிரான மக்கள் எழுச்சியை தெளிவாகக் காட்டியது. அந்தக் கூட்டத்தைப் பார்த்து குழப்பத்தில் கூறிய கருத்துகளே அவை.

ஆனால், ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டமும் சுதந்திரக் கட்சியின் கூட்டமும் வேடிக்கையானவையாக மாறிவிட்டன. இரு கூட்டங்களிலும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்கின்றார்கள்.

அப்படி என்றால் யார் ஆட்சி செய்வது? கூட்டு ஆட்சி நடைபெறவில்லையா என்ற சந்தேகம் எமக்கும் ஏற்பட்டது.

காலி முகத்திடலுக்கு லட்சக் கணக்கான மக்கள் வருகை தந்திருந்தனர். அதில் இளைஞர்கள் அதிகமாக வந்திருந்தனர். அங்கு வந்திருந்த அனைவரும் இப்போதைய ஆட்சிக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

அந்தவகையில், இப்போது வெளிப்பட்டுள்ள மக்கள் எழுச்சியும், தொழிற்சங்க எதிர்ப்பும் முறைகேடான ஆட்சிக்கு எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

இப்போது அனைத்து மக்களும் நாமும் கேட்பது ஒரு தேர்தலையே. வாக்குரிமையை நிலைநாட்டவும், மக்களின் கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் இந்த அரசு தேர்தலை நடத்த வேண்டும்.

ஜனாதிபதி அதனை செய்து வைப்பார் என்ற நம்பிக்கை இருக்கின்றது.- என்றார். (எ)

# பிரபல போதைப்பொருள் வர்த்தகரான வசீம் சித்தீக்கின் விளக்க மறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 04

பிரபல போதைப் பொருள் வர்த்தகரான மொஹமட் வசீம் மொஹமட் சித்தீக்கின் விளக்கமறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடித்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற நீதிவான் லால் ரணசிங்க பண்டார நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட சித்தீக், 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கிணங்க 6 மாதங்கள் தடுப்பில் வைக்கப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

போதைப் பொருள் கடத்தியமை பணச்சலவை மற்றும் வெலே சுதா என்று அழைக்கப்படும் கம்பொல விதானகே சமன் குமாரவுடன் தொடர்பு வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டமையுடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபரின் விளக்க மறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடித்தமையுடன், வழக்கு ஜூலை மாதம் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உத்தரவிட்டார்.

(எ)

# உருத்திரபுரத்தில் குண்டுகள் மீட்பு!

கிளிநொச்சி, மே 04

கிளிநொச்சி உருத்திரபுரம் - பூநகரி வீதியில் உள்ள நீவில் பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நீவில் குளத்துக்கு அருகில் உள்ள பெரிய சிறைற்றை இயந்திரத்தால் மூடும் நடவடிக்கையில் பொது மக்கள் ஈடுபட்டிருந்த போதே குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது 17 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குண்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-70)

# தேரருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் கைது!

நீதிமன்ற வளாகத்தினுள் வண. உடுவே தம்மாலோக்க தேரரை அச்சுறுத்திய நபர் வாழைத்தோட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி இந்த அச்சுறுத்தல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வண. உடுவே தம்மாலோக தேரருக்கு அந்த நபர், தகாத வார்த்தை பிரயோகம் மூலம் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நாம் எதைச் செய்தாலும் வேற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கும் கூட்டத்தாலேயே எமது சமுதாயத்துக்குக் கேடு!

## அமைச்சர் ரிஷாத் கூறுகிறார்



நாம் எதைச் செய்தாலும் அதனை வேற்றுக் கண்ணோட்டத்துடன் எப்போதும் நோக்கும் நமது சமுதாயத்தில் இருக்கும் ஒரு கூட்டத்தாலேயே எமக்கு தொடர்ச்சியாகப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மினுவாங்கொடையில் நேற்றுமுன்தினம் பெண் எழுத்தாளர் ருவைதா மதீன் எழுதிய 'குடிபெயரும் கனவுகள்' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம்கள் வில்பத்து காட்டை அழிக்கின்றார்கள், அரபுக் காலனி உருவாகின்றது, வெளியார்கள் இங்கு குடியேற்றப்படுகின்றார்கள், இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு தோட்டங்கள் செய்யப்படுகின்றன என்று இனவாதிகள் இன்று எமது சமுதாயத்தின் மீது பழி போடுவதற்கு வழி வகுத்தவர்கள் எம்மவர்களிடையே உள்ள ஒரு சிறிய கூட்டமே.

இன்று இனவாத ஊடகங்கள் நாளுக்கு நாள் வில்பத்து தொடர்பிலும் முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பிலும் காட்டூன்களையும் விவரணங்களையும் வெளியிடுவதற்கு இவ்வாறான பொய்யான காட்டிக் கொடுப்புக்களே காரணமாகும்.

சுமார் 25 ஆண்டுகளாக வடமாகாணத்தில் இருந்து மக்கள் வெளியேறி இந்த பிரதேசத்தில் வாழ்ந்தமையால் அவர்கள் வாழ்ந்த கிராமங்களில் பெரும்பாலானவை காடுகளாகவே கிடக்கின்றன. அந்த மக்கள்தாம் மீளக் குடியேறுவதில் பல்வேறு சிக்கல்களை அனுபவிக்கின்றனர்.

மீளக்குடியேறும் மக்களில் அநேகர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், பொருளாதார ரீதியில் நலிந்தவர்கள். அவர்களின் பிரச்சினைகளைக் கேட்பதற்கோ பார்ப்பதற்கோ யாரும் இல்லாத நிலையில் அந்த மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நான் குரல் கொடுக்கின்றேன். அதனால் தான் என்னை இனவாதியாகச் சித்திரித்து நாளாந்தம் தூற்றுகின்றனர். எனினும், நான் என் பணிகளில் இருந்து ஒரு போதும் ஓயப்போவதில்லை.- என்றார். (எ)

## கைக்குண்டு மூதூரில் மீட்பு!



மூதூர்,மே 04

திருகோணமலை மூதூர் பகுதியில் உள்ள வெற்றுக்காணி ஒன்றிலிருந்து எஸ்.எப்.ஜி 87 ரக கைக்குண்டு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டது .

இது தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்று, நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே, மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கைக்குண்டை, திருகோணமலை விசேட அதிரடிப்படையினரின் உதவியோடு செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என மூதூர் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# ஊடகவியலாளர் படுகொலைக்கு நீதி வேண்டி மட்டக்களப்பில் நேற்றுக் கவனவீர்ப்புப் போர்!





மட்டக்களப்பு, மே 04

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சர்வதேச ஊடக சுதந்திரதினமான நேற்றுப் புதன்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக மாவட்ட ஊடகவியலாளர்கள் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் கொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும் என இந்தப் போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு, சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளும் தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வி.கிருஷ்ணகுமார் இதன்போது தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட, அச்சுறுத்தலுக்குள்ளான ஊடகவியலாளர்களுக்கு நீதியான விசாரணை செய்வதற்காக விசேட குழுவொன்றை அமைக்குமாறு நாங்கள் இந்த நல்லாட்சி அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.-என்றார். (ச)

## கண்ணகி கிராமத்தில் குப்பைமேட்டில் தீ!

அக்கரைப்பற்று,மே 04

அக்கரைப்பற்று கண்ணகி கிராமத்திலுள்ள குப்பைமேடு ஒன்றில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தீ பரவியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

'திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையம்' என்ற பெயருடன் காணப்படும் மேற்படி குப்பைமேட்டிலேயே தீ பரவியுள்ளது.

இந்தக் குப்பைமேட்டில் ஆலையடிவேம்புப் பிரதேச சபையால் சேகரிக்கப்படும் குப்பை கொட்டப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த குப்பைமேட்டில் தீ பரவியமையால், அங்கு புகை மூட்டமாகக் காணப்படுகிறது என கிராமவாசிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அக்கரைப்பற்றுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)

## ஏறாவூர் இரட்டைப் படுகொலை; அறுவரின் விளக்கமறியல் நீடிப்பு!

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் அறுவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்றின் மேலதிக நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி உத்தரவிட்டுள்ளார்.

ஏறாவூர், முகாந்திரம் வீதியில் வசித்து வந்த நூர்முஹம்மது ஹுஸைரா (வயது -56) , அவரது திருமணமாகிய மகளான முஹம்மது யூசுப் ஜெனீரா பானு (வயது-32) ஆகியோர் கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்கள் அறுவரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை ஆஜர்படுத்தியபோதே, நீதிவான் இவர்களுக்கான விளக்கமறியலை நீடித்துள்ளார். (ச)

## கோயில் காணி மோசடியைக் கண்டித்து வாழைச்சேனையில் கண்டனப் பேரணி!



வாழைச்சேனை,மே 04

மட்டக்களப்பு வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப் பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபைக்குச் சொந்தமான காணி மோசடி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று புதன்கிழமை வாழைச்சேனையில் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

வாழைச்சேனை ஸ்ரீகைலாயப்பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலய பரிபாலனசபையினரின் எற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கண்டனப் பேரணியில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆலய முன்றிலில் ஆரம்பமான கண்டனப் பேரணி கோறளைப்பற்று பிரதேச சபை வரை சென்று பிரதேச சபைச் செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீனிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

வாழைச்சேனையைச்சேர்ந்த தனிநபருக்குச் சொந்தமான மேற்படிகாணி,வாழைச்சேனை ஸ்ரீகைலாயப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமாகி விட வேண்டும் என 1950 ஆம் ஆண்டு ஆனி மாதம் 26 ஆம் திகதி உறுதி எழுதப்பட்டுள்ளது.

இந்தக் காணியை பிறருக்கு விற்கவோ, நன்கொடையாக வழங்கவோ முடியாது எனவும் உறுதியில் மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது இந்தக் காணி சில நபர்களின் பெயர்களில் சட்டவிரோதமாக மாற்றப்பட்டு, தனிநபர் ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளது. தற்போது அங்கு கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்தரின் 125ஆவது ஜனன தின நிகழ்வுகள்







விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தரின் 125 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷனில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதியில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரபு பிரபானந்த மகராஜ், சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் தலைவர் க.பாஸ்கரன், பொதுச் செயலாளர் ச.ஜெயராஜன் உட்பட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்ணபலரும் கலந்து கொண்டனர். இதன்போது அவரது சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டு பூஜைகள் நடைபெற்றன. அத்துடன் 125 ஆவது ஆண்டைகுறிக்கும் வகையில் மரநடுகையும் இடம்பெற்றது. (ச)

# போராட்டங்களை எதிர்கொள்ளத் தயார்

## 'சைட்டம்' விவகாரம் குறித்து சுகாதார அமைச்சர் ராஜித



கொழும்பு, மே 04

அரசைக் கவிழ்க்கும் நோக்கிலான தொழிற்சங்கப் போராட்டங்களை எதிர் நோக்கத் தயார் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்பட உள்ள தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரும் ஏனைய சில தொழிற்சங்கங்களும் மேற்கொள்ள உள்ள தொழிற்சங்கப் போராட்டத்தை எதிர்கொள்ளத் தயார்.

அரசைக் கவிழ்க்கும் நோக்கிலேயே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது.

வெசாக் பௌர்ணமியின் பின்னர் போராட்டங்கள் நடத்தப்படும் என்று வைத்திய அதிகாரிகள் சங்கமும் கூட்டு எதிர்க்கட்சியும் கூறி வருகின்றன.

இது தொடர்பான செய்திகளை ஊடகங்களில் பார்வையிட முடிந்தது. இந்த நடவடிக்கை முழுமையாகவே அரசியல் சார்ந்த ஒரு நடவடிக்கையாகும்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கூட்டு எதிர்க்கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. எவ்வாறெனினும் இந்தச் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.-என்றார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) விவகாரத்தில் அரசின் நிலைப்பாட்டை ஆட்சேபித்து நாடு தழுவிய ரீதியில் நாளை வெள்ளிக்கிழமையன்று பெரும் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்று எடுப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தயாராகி வருகின்றது. (எ)

## தொழிலாளரை எவராலும் அடக்கமுடியாது! லால்காந்த எச்சரிக்கிறார்

தற்போது நாட்டில் இடம் பெறும் தொழிலாளர் உரிமைகளுக்கான போராட்டங்களை சரத் பொன்சேகாவை கொண்டு அடக்க மைத்திரி ரணில் அரசு முயற்சிக்கின்றது. ஆனால் எவராலும் தொழிலாளர்களை அடக்க முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் லால் காந்த தெரிவித்தார்.

தொழிலாளர்களை அடக்கும் முயற்சியை அரசு கைவிட வேண்டும் என்று மைத்திரி ரணில் அரசை எச்சரிகின்றோம் என்றார் அவர்.

கொழும்பு பீ. ஆர்.சீ. மைதானத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரி வித்தார். (எ)

## கஜபா பிரிவின் தலைமை அதிகாரியாக பதவியேற்றுள்ளார் சவேந்திர சில்வா



இலங்கை இராணுவத்தின் கஜபா படைப்பிரிவின் 11 ஆவது தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பதவியேற்றுள்ளார்.

கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வந்த மேஜர் ஜெனரல் உதய பெரேரா, கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் ஓய்வு பெற்றார்.

இதையடுத்தே, கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கடந்த மாதம் 27ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டார்.

அனுராதபுர- சாலியபுரவில் உள்ள கஜபா படைப் பிரிவு தலைமையகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கஜபா படைப்பிரிவின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இறுதிக் கட்டப்போரில் இடம் பெற்ற போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளில் ஒருவராக குற்றம் சாட்டப்பட்டு வருபவராவார்.

அவருக்கு இலங்கை இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தளபதியின் பொது உதவி அதிகாரியாக அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட போது, அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (எ)

# சுகாதார அமைச்சர் ராஜித மீது ஜனாதிபதியிடம் முறைப்பாடு!

கொழும்பு, மே 04

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ண, அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக்கூட்டத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தம்மை நேரடியாக விமர்சனம் செய்தார் என்று ஜோன் செனவிரத்ன ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த நடவடிக்கை தொடர்பில் வருந்துவதாகவும் இது பிழையான விடயம் என்றும் நேற்று முன்தினம் மாலை அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

செனவிரத்ன ஜனாதி பதியிடம் செய்த முறைப்பாட்டில்:-

அமைச்சர் ராஜித அமைச்சரவையின் இணைப் பேச்சாளராவார். அவர் சொல்லும் விடயங்கள் பொறுப்புடன் சொல்லப்பட வேண்டும். மே தினக் கூட்டத்தில் நான் மஹிந்தவின் செருப்பை நக்குவதாக நேரடியாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அவ்வாறாயின் நாம் எல்லோரும் செருப்பு நக்குபவர்களே. ஏனெனில் ராஜிதவும் மஹிந்தவின் அமைச்சரவையில் அங்கம் வகித்திருந்தார். இவ்வாறு கருத்து வெளியிட அனுமதிக்க வேண்டாம்.-என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி கூறுகையில்:-

அது உண்மைதான். இவ்வாறான விடயங்கள் இடம் பெறக்கூடாது. ஒரே அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சகோதர அமைச்சர்களை விமர்சனம் செய்வது நல்லதல்ல. எனவே, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்றார்.

இதேவேளை, இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பங்கேற்றிருக்கவில்லை என்பது குறிப் பிடத் தக்கது. (எ)

## இலங்கைக் கடற்படைக்கான ஆழ்கடல் ரோந்துக் கப்பல் கோவாவில் வெள்ளோட்டம்




இலங்கைக் கடற்படைக்காக இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்று முன்தினம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

இலங்கைக் கடற் படைக்காக இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை கோவா கப்பல் கட்டும் நிறுவனம் கட்டி வருகிறது.

105 மீற்றர் நீளமான இந்தக் கப்பல்கள் இரண்டும் விரைவில் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்படவுள்ளன.

முதலாவது கப்பல் நீரில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கப்பட்டு, அதன் தொழில்நுட்ப கருவிகள் உள்ளிட்டவற்றைப் பொருத்தும் இறுதிக்கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் பயிற்சிகளைப் பெறுவதற்காக இலங்கைக் கடற்படை அதிகாரிகள் குழுவொன்று ஏற்கனவே கோவா சென்றுள்ளது.

இந்த நிலையில், இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் நேற்றுமுன்தினம் நீரில் இறக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது.

இதையடுத்து, கப்பலில் இறுதிக்கட்ட தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தப்பட்ட பின்னர், இந்த ஆண்டு இறுதிக்கும் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்படும். (எ)

## எம்.பியாக பதவி வகிக்க கீதாவுக்கு உரிமையில்லை



இரட்டை குடியுரிமை பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகிக்க முடியாது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கீதாவுக்கு எதிரான இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், நீதிபதி விஜித் மலல் கொடவின் இணக்கத்துக்கு அமைய, நீதிபதி பத்மன் சூரசேன இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்து குடியுரிமையைப் பெற்றுள்ள கீதா குமாரசிங்க தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட முடியாது.

மேலும், இரட்டைக் குடியுரிமை பெற்ற எவரும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராகக் கடமையாற்ற முடியாது என்பது தற்போதைய சட்டம் என்று கீதாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. காலி மாவட்டத்தைச் சேர்ந்த கே. புவனக்க, ஜே.கே. அபேவர்தன உள்ளிட்ட 4 பேர் கீதாகுமாரசிங்கவுக்கு எதிராக மனு தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (எ)

## இலங்கையின் விசா முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை

இலங்கையின் விசா முறையில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்குகுடிவரவு குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தற்போது நாட்டில் நிலவும் சுமுகமான நிலை காரணமாக முதலீட்டாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதனால் அவர்களின் நலன் கருதியே விசாமுறையில் மாற்றங்களை கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எந்தச் சிக்கலும் இன்றி இலகுவான முறையில் விசாவை வழங்குவதற்கு திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புதிய முறையின் கீழ் இரட்டை பிரஜா உரிமையும் வழங்கப்படும்.

கடந்த வருடத்தில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு இரட்டை பிரஜா உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இதில் நிலவும் சிக்கல் காரணமாக புதிய வேலைத் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.- என்று திணைக்களம் கூறுகிறது. (எ)

# விமானத்தில் இருந்தோனேஷியப் பெண் திடீர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பு!

## சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில்

சவூதி அரேபியாவில் இருந்து இந்தோனேஷியாவுக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த வெளி நாட்டுப் பெண் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை விமானத்தில் பயணித்திருந்த நிலையிலேயே திடீரென மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்தார் என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் இந்தோனேஷியாவைச் சேர்ந்த 61 வயதான பெண் என்றும், தனது கணவருடன் பயணித்துக் கொண்டிருந்த போதே அவர் விமானத்தில் உயிரிழந்தார் என்றும் விமான நிலையத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அவரது சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், சடலம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதரகத்தின் அறிவுரைக்கு அமைய மேற்கொள்ளவுள்ளதாக, கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (எ)

# பலஸ்தீன சிறைக் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவளிப்போம்

பலஸ்தீன சிறைக் கைதிகளின் மனிதாபிமான போராட்டத்துக்கு ஒருமைப்பாட்டை தெரிவிக்குமாறு பலஸ்தீன தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இஸ்ரேலிய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்களின் உண்ணாவிரதப் போராட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதனை நினைவு படுத்தும் வகையில் இலங்கையில் உள்ள பலஸ்தீனத் தூதரகத்தில் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்

## இலங்கைத் தூதரகத்தில் கையெழுத்து வேட்டை



கப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையும், நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் நண் பகல் 12 மணி வரை யும், கொழும்பு 07, இலக்கம் 110/10, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பலஸ்தீனதூதரகத்தில்கையொப்ப புத்தகம் வைக்கப்படும் என்று தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள பலஸ்தீன ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ)

# தினசரி ராசி பலன் 04.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 21 ஆம் நாள் நவமித்திதி இரவு 7.30 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: மகம் பி.இ. 5.02 மணி வரை. பின்னர் பூரம். அமிர்தசித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.40 மணி முதல் 3.14 மணி வரை. சுபநேரம்: காலை 7.23 மணி முதல் 8.52 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: சித்திரைமாத வளர்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மகம்.

## 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மகிழ்ச்சியான நாள். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமணம் தடைப்பட்டு வந்தவர்களுக்கு வலியவந்து மணம் கூடும். வழக்குகள் சாதகமான தீர்ப்பைத் தரும்.

**ரிஷபம்:** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. தொழிலில் கடினமான உழைப்பு இருக்கும். நண்பர்களுடன் விரிசல் உண்டாகும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற அலைச்சல் உண்டாகும். தொழிலில் மிகவும் கடுமையான உழைப்பு, உறுதியும் தேவைப்படும்.

**கடகம்:** இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். மனைவி வழியால் ஆதாயம் உண்டாகும். பிரிந்த உறவுகள் வலியவருவார்கள். உத்தியோக முன்னேற்றம் உண்டாகும்.

**சிம்மம்:** நன்மையான நாள். பணம் பலவழிகளிலும் வந்து சேரும். உத்தியோகத்தர்கள் ஏற்றமடைவார்கள். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் உறுதியாகும்.

**கன்னி:** சஞ்சலமான நாள். மனக்குழப்பமடையும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலில் சிரமங்களுடன், மனதில் இனம் தெரியாத கவலை நீடிக்கும்.

**துலாம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. சிலருக்கு புதிய தொழில் தொடங்கவும் வாய்ப்புக்கள் கிட்டும். பிரிந்தவர்கள் மீண்டும் சேர்வார்கள்.

**விருச்சிகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பெண்களுக்குத் திருமணத்தடையும், காரியத் தடையும் உண்டாகும். தொழிலில் சில தடைகள் சிரமங்களை அடைய வேண்டிவரும்.

**தனுசு:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். வீடுவாங்க உகந்த நாளாக அமையும். சிலருக்கு திருமணத் தடை நீங்கி திருமணம் நடக்கும்.

**மகரம்:** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். தொழிலில் நட்டமுண்டாகும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**கும்பம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகளில் தடை, தாமதம் ஏற்படும். வீண் அலைச்சல் உண்டாகும். கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்கவும்.

**மீனம்:** ஆனந்தமான நாள். இதுவரை வாட்டி வந்த நோய்கள் நீங்கும். நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். சிலர் குடும்பத்துடன் சுற்றுலாப் பயணம் செல்வார்கள்.

சந்திராட்டமநாள்: உத்தராடம் 2, 3, 4 திருவோணம் அவிட்டம் 1, 2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இத்தினத்தில் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

# இசை அரங்கம் சனியன்று

யாழ்ப்பாணம் மருதனார்மடம் இராமநாதன் சங்கீத அக்கடமியின் முன்னாள் இசை விரிவுரையாளர் ஏ.ஜி.ஐயாக்கண்ணு தேசிகரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இசைஅரங்கம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 'சங்கீத ரத்னா' குரு நெய்வேலி சந்தான கோபாலனின் இந்த இசைக்கச்சேரி நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கே.கே.எஸ்.வீதி பூநாறி மடம் செல்வமஹால் மண்டபத்தில் இளைப்பாறிய சங்கீதப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ஆறுமுகம் நடராஜன் கலந்து கொள்வார்.

நினைவுப் பேருரையை இளைப்பாறிய சங்கீத ஆசிரிய ஆலோசகர் திருமதி ஞானகுமாரி சிவனேசன் நிகழ்த்துவார். இசைக்கச்சேரியில் பாட்டு: நெய்வேலி சந்தான கோபாலன், வயலின் ஏ.ஜி.ஏ.ஞானசுந்தரம், மிருதங்கம் ஏ.சோமசுந்தர தேசிகர், கெஞ்சிரா வைத்தியர் எஸ்.சங்கர்.

மேற்படி கலைஞர்கள் பங்குபற்றும் வயலின் சோலோ நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறும்.(ச)

# மின்சாரத்தைச் சேமிப்போருக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்

## எரிசக்தி அமைச்சர் சியாம்பலாப்பிட்டிய கூறுகிறார்

கொழும்பு, மே 04

மின்சாரத்தைச் சேமிப்போருக்கு விசேட சலுகைகளை வழங்கு வதற்குத் தேவையான திட்டம்தற்போது தயாரிக்கப்பட்டிருப்பதாக மின்சக்தி மற்றும் நிலைபேறான எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காற்று சீராக்கி இயந்திரத்தை பயன்படுத்துவதற்கான புதிய சுற்றிக்கைகொண்டுவரப்படும்.

மின்சாரத்தை சேமிக்கும் மூலோபாயமாக இந்தப் புதிய விதிகள் கொண்டுவரப்படுகின்றன.

இதேவேளை, சூரிய எரிசக்தி பெற்றுக்கொடுப்பதற்கான புதிய சுற்றறிக்கையும் கொண்டு வரப்படவுள்ளது.

சூரிய எரிசக்தியை பெற்றுக் கொள்வதற்கு 40 சுற்றளவு அடிக்கு மேற்பட்ட கூரையைக் கொண்ட வீடொன்றே தேவை. -என்றார். (எ)

# யாழ்.தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் சங்கத் தலைவர் பேராசிரியர் திருமதி மனோன் மணிசண்முகதாஸன்தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் 'உள்ளுவதெல்லாம்வள்ளுவம்' என்னும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார். நிகழ்வில் குறள் வழி நடனம், சிந்தனை அரங்கு மற்றும் நாடகம் என்பன இடம் பெறவுள்ளன. (ச)

# மின் பாவனை 10 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, மே 04

நாட்டின் நாளாந்த மின்சார தேவை பத்து வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக் கத்தக்க சக்திவள அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஸன ஜயவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வறட்சியான காலநிலையால் மின் விநியோகத்துக்கு தடை ஏற்பட்டுள்ளது.நிலைமைக்கேற்ப அதியுயர் அழுத்தமுடைய மின்பிறப் பாக்கிகளை பயன்படுத்து வதற்காக பதிவு செய்துள்ள தொழிற்சாலைகளுக்கு அந்தஇயந்திரங்களைப் பயன்படுத்தி மின்உற்பத்தியை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 250 இற்கும் மேற்பட்ட பாவனையாளர்கள் தன்னியக்க மின் பிறப்பாக்க இயந்திரங் களைப் பயன்படுத்துவ தற்காக தங்களைப் பதிவு செய்துள்ளனர்.

அதனடிப்படையில் 500 மெகா வோல்ற்றுக்கும் அதிகமான மின்சார அலகுகளை பிறப்பாக்கம் செய்வதற்கு இயலும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.- என்றார்.

# உரிய ஒழுங்கின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு!

## உயர் நீதிமன்றில் சட்டமா அதிபர் இணக்கம்

கொழும்பு, மே 04

அரச சேவை ஆணைக் குழுவின் உரிய அனுமதி மற்றும் முறையான ஒழுங்கு என்பனவற்றின் அடிப்படையிலேயே இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ளவர்களுக்கு பதவியுயர்வு வழங்குவதற்கு சட்ட மா அதிபர் சார்பில் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் பழிவாங்கல் எனும் போர்வையில், ஆசிரிய சேவையிலுள்ள 4 ஆயிரத்து 200 பேருக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே சட்டமா அதிபர் இவ்வாறு நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையாகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இன்திக தேமுனி டி சில்வா இந்த இணக்கத்தை அறிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டுடன் வழக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த உடன்பாட்டுக்கு இரு தரப்பினரும் உடன்பாடு கண்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (எ)

# பிரான்ஸ் வெர்செயி தமிழ்ச் சங்கத்தின் தமிழர் விளையாட்டு விழா








பிரான்ஸ் வெர்செயி தமிழ்ச்சங்கம் முதற் தடவையாக தமிழர் விளையாட்டு விழாவை அண்மையில் அவ்வூர் வாழ் தமிழ் மற்றும் பல்லின மக்களுடனும், தமிழ்ச்சோலை மாணவர்களுடனும் சேர்ந்து மாநகர விளையாட்டுத் திடலில் நடத்தியிருந்தது.

பொதுச்சுடரை வெர்சேயில் தமிழ்ச் சோலை நிர்வாகி யகுலேந்திரன் ஏற்றி வைக்க, பிரெஞ்சுத் தேசியக்கொடியை மாநகரசபையின் அந்தப் பகுதி தலைவர் டொறொல்த் டொறாயும் தமிழீழத் தேசியக்கொடியை வெர்சே தமிழ்ச் சங்கத் தலைவர் சகாயநாதனும் ஏற்றி வைத்தனர்., ஈகச்சுடரை 12.10.1997 இல் முழங்காவிலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் குமுதினியின் சகோதரி ஏற்றி வைத்து மலர் வணக்கமும் செய்தனர். தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள் நடைபெற்றன. பழம் பொறுக்குதல், சாக்கோட்டம், கரண்டியில் பழம் கொண்டு ஓடுதல், போத்தல்களில் நீர் நிரப்புதல், பனிஸ் உண்ணுதல், மதிநுட்பத்துக்குரிய குளம் கரை என்ற விளையாட்டும் நடைபெற்றன. இடைவேளையின் போது மாணவிகளின் நடனமும், சிறுவர்களின் தமிழீழத் தேசியத் தலைவர் புகழ்பாடும் நடனமும் நடைபெற்றன. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான கிளித்தட்டு (தாச்சிப் போட்டி) நடைபெற் றது.

ஆண்கள், பெண்கள் குறிப்பாக இளையவர்கள் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். இன்னும் பல பாரம்பரிய விளையாட்டுக்கள் நிகழ்ச்சி நிரல்களில் இருந்தபோதும் அடைமழை காரணமாக அவை ரத்துச் செய்யப்பட்டிருந்தன. காலையிலிருந்து மாலை வரை அப்பிரதேச மக்கள் தமது குழந்தைகளுடன் குடும்பமாகத் தம்தாய் மொழி பேசி, தமிழ் உணவுகளை உண்டு உற்சாகமாய் முடியும் வரை இருந்தனர். சாக் கோட்டம், குளம்கரை என்கின்ற விளையாட்டுக்களில் தமிழ் மொழி தெரியாவிட்டாலும் வேற்று இன சகோதரக் குழந்தைகள், பெரியவர்கள் பங்கு பற்றி வெற்றியையும் பெற்றுக் கொண்டனர்.

# சுவிஸில் மூதாளர் அன்பு இல்லத்தின் ஆண்டு நிறைவு விழா



சுவிஸ் நாட்டின் சூரிச் நகரிலுள்ள சிவன் கோயில் சைவத்தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்படும் மூதாளர் அன்பு இல்லத்தின் ஓராண்டு நிறைவு விழா மூதாளர் இல்ல மண் டபத்தில் கடந்த திங்கட் கிழமை பிற்பகல் நடைபெற்றது.

ரகுநாதகுருக்களின் ஆசியுரையுடன் ஆரம்பமான நிகழ்வில் வரவேற்புரையை ச.ஜெயசீலன் நிகழ்த்தினார்.





நிகழ்வில் மூதாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மூதாளர் இல்லத்துக்கு சேவையாற்றும் சேவையாளர்களும் கௌர விக்கப்பட்டனர்.

நிகழ்வில் தாயகக்கலைஞன் கந்தப்பு ஜெயந்தனின் பக்திப் பாடல்கள் இடம்பெற்றமையுடன் பரா.இராதாகிருஷ்ணன், ஆசிரியர் விவேகானந்தன், யோகா பயிற்றுவிப்பாளர் லிங்கேஸ் மீரா உட்பட பலர் உரையாற்றினர்.

சூரிச் சிவன் கோயில் சைவத்த மிழ்ச்சங்கத்தால் தாயகத்தில் எட்டு ஏக்கர் நிலப்பரப்பில்மூன்று மாடிகளைக் கொண்ட 100 அறைகளை உள்ளடக்கி மூதாளர் இல்லம் ஒன்று அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)



# சிங்கப்பூர் வளர் தமிழ் இயக்கம் நடத்திய 11 ஆவது தமிழ்மொழி விழா



சிங்கப்பூர் வளர் தமிழ் இயக்கத்தின் ஆதரவில் 2017 ஆம் ஆண்டுக்கான 11 ஆவது ஆண்டு தமிழ் மொழி விழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த மாதம் 15ஆம் திகதி மாலை சிங்கப்பூர் உமறுப்புலவர் அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வருடம்தோறும் நடைபெறும் இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு தலைப்பு ஒன்று வழங்கப்பட்டு மாணவர்கள் அந்த தலைப்பை ஆய்வு செய்து படைக்க வேண்டும்.அந்த வகையில் இந்த முறையும் உணவை கருப்பொருளாக வைத்து தமிழர் பாரம்பரிய உணவும், ஆரோக்கியமும் என்ற தலைப்பு வழங்கப்பட்டுள்ளது. நிகழ்வின் இறுதிச் சுற்றில் 60 மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். இந்த விழாவில் தமிழ் இயக்கத்தின் தலைவர் ராஜாராம் உட்படப் பல்வேறு தமிழ் அமைப்புகளை சார்ந்தவர்களும், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், தமிழ்ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஜேர்மன் பாரதி கலைக்கூடத்தின் பேர்லின் கிளையின் தற்காப்புப் பிரிவு வளர்ச்சிப் பாதையில்...!





ஜேர்மன் மேஜர் பாரதி கலைக்கூடத்தின் பேர்லின் கிளையின் ஒழுங்கமைப்பில் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தற்காப்புக்கலைப் பிரிவு ஜேர்மன் கராத்தே சங்கத்தின் அங்கீகாரத்துடன் இயங்குவதுடன், அதற்கான இவ்வருட தெரிவு அண்மையில் நடைபெற்றது. இந்தத் தேர்வில் கராத்தே மாணவர்கள் 10 பேர் கலந்துகொண்டு சிறப்பான முறையில் அனைவரும் சித்தி பெற்றனர்.

குறிப்பாக மூன்று மாணவர்கள் பழுப்பு பெல்ட்டுக்கான தெரிவில் சித்தி பெற்றமை மேஜர் பாரதி கலைக்கூடத்தின் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதுடன், சம நேரத்தில் ஜேர்மன் மக்களின் சமூகத்தில் ஈழத்தமிழர்களின் அடையாளத்தையும், பிரதிநித்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜேர்மன் கராத்தே சங்கத்தின் சார்பில் சென்சி ஜேகான் கொஸ்ரரின் முன்னிலையில் இந்தத் தெரிவு நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் மேஜர் பாரதி கலைக்கூடத்தின் தற்காப்புக்கலைப் பிரிவு கீழ்க்காணும் புதிய பயிற்சி மண்டபத்தில் வாரத்தில் செவ்வாய் மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறும். தற்காப்புக்கலைப் பிரிவில் மாணவர்களால் பெறப்படும் கட்டணம், பயிற்சியறைக்கான செலவுக்கும் மிகுதி தாயகச் சிறுவர்களின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் எழுத்தாளர் விழா ஆஸி.மல்கிரேவ் நகரில்

ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் தமிழ் எழுத்தாளர் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு மல்கிரேவ் ஸ்டிர்லிங் இறையியல் மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் மெல்லியரங்கு, வாசிப்பு அனுபவ அரங்கு, மொழி பெயர்ப்பு அரங்கு, சிறப்புரைகள், ஆவணப்படக் காட்சி என்பன இடம்பெறவுள்ளன. (ச)





பொன்.வேணு கிருஷ்ணா

ட்ரம்ப்பின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான லெப்டினண்ட் ஜெனரல் எச்.ஆர்.மெக்மாஸ்டர், ABC தொலைக் காட்சியின் இந்த வார நிகழ்ச்சி என்பதில் பேசுகையில் ''இதேநிலை இனியும் தொடரமுடியாது'' என்று அறிவித்தார். செய்யப் போவதை முன்கூட்டியே அறிவிப்பது தன் வேலை இல்லை என்பதை ஜனாதிபதி மிகத் தெளிவாக்கி விட்டிருக்கிறார் என்று அவர் மேலும் சேர்த்துக்கொண்டார்.

அமெரிக்காவின் நோக்கங்கள் குறித்த இந்ததிட்டமிட்ட குழப்பும் செய்தியானது அமெரிக்காவின் முன்கூட்டிய வலிந்த ஓர் இராணுவத் தாக்குதல் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத்தவிர வேறெந்த நோக்கத்திற்கும் சேவைசெய்யவில்லை. விடயங்கள் கைமீறிச் செல்லும் அபாயத்தை இது மேலும் அதிகப்படுத்துகிறது.





ட்ரம்ப் நிர்வாகம் அடுத்து என்ன செய்யப்போகிறது என்பது ஒருவரும் அறியாததாக இருக்கிறது என்ற உண்மையானது சூழ்நிலையை 1960 களின் ஆரம்பத்தில் பனிப்போரின் உச்சத்தில் இருந்ததை விடவும் அதிக அபாயமானதாக ஆக்குகிறது. 1962 கியூப ஏவுகணை நெருக்கடியின் போது, கென்னடி நிர்வாகமானது, தனது நடவடிக்கைகள் சோவியத் ஒன்றியத்தால் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டு, அது ஓர் அணுஆயுத மோதலில் விளைந்து விடக் கூடும் என்பது குறித்து அதீத அச்சம் கொண்டிருந்தது என்பது வரலாற்றுக் குறிப்பேடுகளில் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படியானதொரு எந்தக்கவலையும் இன்று தென்படவில்லை. அதுதவிர, பொருத்தமாய் கருதுகின்ற நடவடிக்கைகளை உத்தரவிட ஆங்காங்கு இருக்கும் இராணுவத் தளபதிகளுக்கு அதிகாரம் அளித்திருக்கின்றேன் என ட்ரம்ப் பெருமையடித்திருக்கிறார் என்ற உண்மையில் இந்த அபாயம் மேலும் தீவிரப்பட்டிருக்கிறது. சென்ற வாரத்தில் பெரிய வெடிமருந்து வான் வெடிகுண்டு (MOAB) தனது கைவசம் இருப்பதில் அணு-சாராத மிகப்பெரும் குண்டை பயன்படுத்தும் முடிவு ஆப்கானிஸ்தானில் இருக்கும் இராணுவ அதிகாரிகளால் எடுக்கப்பட்டது என நிர்வாகம் அறியச் செய்திருக்கிறது. வடகொரியா, சீனா, ரஷ்யா அல்லது ஈரான் என அமெரிக்காவின் சாத்தியமான எந்தவொரு எதிரியும் எண்ணற்ற முகமறியாத முடிவெடுப்பவர்களை எதிர்கொண்டு நிற்கின்றன, யார் கையில் கட்டுப்பாடு இருக்கிறது என்பது எவரொருவருக்கும் தெரியாது.

ட்ரம்ப் நிர்வாகம் மற்றும் இராணுவத்திற்கும் அப்பால், அமெரிக்காவிலுள்ள ஒட்டுமொத்த அரசியல் மற்றும் ஊடக ஸ்தாபகங்களும் போர்க் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளன. முக்கிய செய்தித் தாள்களும் தொலைக்காட்சிகளும் அரசாங்க பிரசாரங்கள் தவிர்ந்த வேறொன்றையும் பேசுவது கிடையாது. வாஷிங்டனில் இருந்து வரும் வம்பிழுப்பான வாய்வீச்சு குறித்து எந்தவொரு விமர்சனபூர்வ மதிப்பீடும் கூட சிறிதும் இல்லாதிருக்கும் ஒரு சமயத்தில், ஒரு போரின் பின்விளைவுகள் குறித்த வெளிப்படையானதொரு மதிப்பீடு குறித்தெல்லாம் கேட்கவும் தேவையில்லை.

வடகொரியா உடனான மோதல் குறித்த உத்தியோகபூர்வ அரசு விவரிப்பு முற்றிலும் சவால் செய்யப் படாமல் நகர்கிறது. கடந்த கால் நூற் றாண்டு காலத்தில் அமெரிக்காவினால் தொடுக்கப்பட்ட ஒவ்வொரு மற்ற போரையும் அடியொற்றி, இந்த மோதலும் மிக அபத்தமான மற்றும் சிறுபிள்ளைத்தனமான வடிவங்களில் விளக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. பனாமாவின் நோரிகா, ஈராக்கின் சதாம் ஹுசைன், சேர்பியாவின் மிலோசெவிக், லிபியாவின் கடாபி, சிரியாவின் ஆசாத் மற்றும் ரஷ்யாவின் புட்டின் ஆகியோரின் விடயத்தில் போலவே, வடகொரியாவின் கிம் ஜோங்-உன் இப்போது, மோதலைத் தூண்டி உலகின் அமைதியை அச்சுறுத்துகின்ற ஒரு கிறுக்கு சர்வாதிகாரியாக சித்திரிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார். எந்த காரணகாரிய விளக்கமும் கொடுக்கப் படாமலேயே, வடகொரியாவின் அணு ஆயுதங்கள் மற்றும் சோதனை வெடிப்பு ஏவுகணைகளது வேலைத்திட்டம் குற்றவியல்தனமானதாகவும் கிறுக்குத்தனமானதாகவும் கூறி கண்டனம் செய்யப்படுகிறது.

இந்த மோசடியான மற்றும் சிடுமூஞ்சித்தனமான விவரிப்பில், கொரிய மக்கள் மீதான ஏகாதிபத்திய ஒடுக்குமுறை வரலாற்றின் - 1910 முதல் 1945 வரையான 35 ஆண்டுகால மிருகத்தனமான ஜப்பானிய காலனித்துவ ஒடுக்குமுறை, அல்லது 1950இற்கும் 1953இற்கும் இடையில் வடகொரியாவுக்கு எதிரான அமெரிக்காவின் போரினால் கிட்டத்தட்ட 3 மில்லியன் உயிர்கள் பலியான படுபயங்கர போர் மரண எண்ணிக்கை ஆகியவை குறித்த எந்தக் குறிப்பும் இல்லை. கொரியப் போரின் காலம் முழுமையாக அமெரிக்க இராணுவமானது அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் இடைவிடாத அழுத்தத்தை செலுத்தியது என்ற உண்மை குறித்து அமெரிக்க ஊடகங்கள் வாயே திறப்பதில்லை.

வல்லரசின் ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையின் ஒரு நெடிய வரலாற்றைக் கொண்ட வட கொரியா என்ற ஒரு சிறிய நாடு, உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய அரசினால் அழிக்கப்படுவதற்கு அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது ஓர் அரசியல் உண்மையாகும்.

வல்லரசின் ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையின் ஒரு நெடிய வரலாற்றைக் கொண்ட வடகொரியா என்ற ஒரு சிறிய நாடு, உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஏகாதிபத்திய அரசினால் அழிக்கப்படுவதற்கு அச்சுறுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது ஓர் அரசியல் உண்மையாகும். வடகொரிய ஆட்சியின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்காத அதேநேரத்தில், அது தன் இருப்புக்கு அணு ஆயுதங்கள் அவசியம் என ஏன் நம்புகிறது என்பதைப் புரிந்து கொள்வது கடினமான ஒன்றல்ல. வடகொரியாவின் உத்தியோகபூர்வ மத்திய செய்தி நிறுவனம் தாங்கி வந்த ஒரு அறிக்கையில், வடக்கின் மக்கள் இராணுவத்தின் பொது வீரர்களுக்கான ஓர் செய்தியாளர் கூறினார்: அமெரிக்கா அதன் மூர்க்கத்தனத்திற்கு பரிதாபகரமான விதத்தில் பலியான ஈராக் மற்றும் லிபியாவை கையாண்டதைப்போலும், அது தாக்கப்பட்டதற்குப் பின்னரும் கூட உடனடியாக பதில் தராத சிரியாவைப்போல் எங்களைக் கையாண்டு விடலாம் என்று நினைத்தால் அதனை விட முட்டாள்தனமான ஒன்று வேறெதுவும் இருக்க முடியாது.






வடகொரியாவை நோக்கிய அமெரிக்க மிரட்டலின் பின்னால், அமெரிக்காவுக்கான நீண்டகால பொருளாதார மற்றும் புவியரசியல் போட்டியாக அமெரிக்க அதிகாரிகளும் இராணுவ மூலோபாயவாதிகளும் பார்க்கின்ற சீனாவுடனான அதன் மிக அடிப்படையான மோதல் அமைந்திருக்கிறது. கொரிய தீபகற்பத்திலான பிரசாரத்தின் மையதானமாய் இருப்பது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தின் மீதான அமெரிக்காவின் மேலாதிக்கத்தை சீனா -இதுவும் அணுஆயுதங்களைக் கொண்டிருக்கிறது- ஏற்க நிர்ப்பந்திக்கும் முயற்சியாகும்.

உலகின் ஒட்டுமொத்தக் கவனமும் கிழக்குஆசியாவின்மீது குவிந்திருக்கிறது என்றபோதிலும், அணுஆயுத சக்திகளிடையேயான ஒரு மோதலுக்கான இன்னொரு வெடிப்பு புள்ளியாக அமைந்திருக்கக் கூடிய சிரியா மற்றும் ரஷ்யாவுக்கு எதிரான அதன் பிரச்சாரத்தையும் அமெரிக்கா தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறது.

(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




135

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### நோர்வேயின் சமாதான முயற்சி

சமாதானப் பேச்சுகளுக்கு முன்னதாகப் போருக்கு ஓய்வுகொடுத்து அமைதிபேணுவது அவசியம் இல்லை என்பதே சந்திரிகா அரசின் கண்டிப்பான நிலைப்பாடாக இருந்தது. பேச்சுகள் ஆரம்பமாகி, ஒரு திருப்திகரமான முன்னேற்றத்தை எட்டிய நிலையிலேயே பகை நிறுத்தம் பற்றிப் பரிசீலனை செய்யலாம் என அரசின் அறிக்கை தெளிவுபடுத்தியது. இன்னொருவகையில் சொல்வதாயின், சந்திரிகாவின் அரசு இராணுவ அணுகுமுறையைக் கைவிடத் தயாராக இல்லை. ஒரு புறம் சமரசப் பேச்சுகளை நடத்திக் கொண்டு, மறுபுறம் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைத் தொடர்வதையே சந்திரிகா விரும்பினார். ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் ஏற்க மறுத்தனர். சண்டையையும் செய்து கொண்டு, சமரசத்திலும் ஈடுபட விடுதலைப்புலிகள் தயாராக இல்லை. இரு தரப்பினருக்கும் மத்தியில் நிலவிய இந்த முரண்பாடு நோர்வேயின் சமாதான முன் முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போட்டது.

அந்த வரலாற்றுக் கால கட்டத்தில், சிறிலங்காவின் படைத்துறை ஒரு பாரதூரமான நெருக்கடியை எதிர் கொண்டு நின்றது. பல ஆயிரக்கணக்கான படையினரின் உயிர்களைப் பலிகொடுத்து. வன்னிப் பெரும் சமர்களில் பெரிய பின்னடைவுகளை இராணுவம் சந்திக்க நேர்ந்தது. 'ஓயாத அலைகள்' என்ற குறியீட்டுப் பெயருடன், விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஏவிவிட்ட வலிந்து தாக்குதல் படை நடவடிக்கைகள், வெற்றிகொள்ள முடியாத இரும்புக் கோட்டைகள்' என இராணுவத்தால் கருதப்பட்ட படைத் தளங்கள் எல்லாவற்றையுமே தகர்த்தெறிந்தன. வன்னிப் படையெடுப்பில் தொடர்ச்சியாக விளைந்த நாசகரமான தோல்விகளும், ஈற்றில் ஆனையிறவுப் படைத் தளத்தின் வீழ்ச்சியும், சிறிலங்கா தரைப் படையின் போரிடும் வல்லமையை மோசமாகச் சீரழித்திருந்தன. ஆனால், மறுபுறத்தில், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், சிங்களத்தின் வன்னிப் படையெடுப்பை முறியடித்தமையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த படைத் தளங்களையும் பட்டினங்களையும் கைப்பற்றியமையும் தமிழீழப் போரரங்கின் இராணுவச் சமநிலையில் புலிகளை மேலோங்க வைத்த அபாரமான போரியற் சாதனைகளாகும்.

இந்தத் தொடர்ச்சியான போர்க்கள வெற்றிகளை அடிக்கற்களாக இட்டுக் கட்டியெழுப்பப்பட்ட மிக உறுதியான இராணுவப் பலத்தில் இருந்த வண்ணமே, 2000 ஆம் ஆண்டு டிசெம்பரில் - நத்தார் பண்டிகையை முன்னிட்டு - ஒரு தலைபட்சமான போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்தனர். அத்தோடு, யாழ். குடாவையும், மன்னார் தீவுப் பகுதியையும் தவிர, வட பிராந்தியத்தின் முழு நிலப்பரப்பிலும், கிழக்குப் பிராந்தியத்தின் மிகப் பெரும் நிலப்பரப்பிலும் விடுதலைப் புலிகள் தங்கள் நிர்வாகக் கட்டமைப்பை நிறுவியிருந்தனர். இவ்வாறாக, ஒரு பலமான இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்தவாறும் தமிழர் தாயகத்தின் பெரும் பரப்பில் ஒரு நிழல் அரசை நிர்வகித்த வண்ணமுமே சமரச அரசியல் பேச்சு மேசையில் அமர்வதில் தமக்கு இருக்கும் ஆர்வத்தைப் புலிகள் குறிப்புணர்த்தினர். ஆனால், சமாதானத்துக்கான பிரபாகரனின் அழைப்பை சந்திரிகா அம்மையார் நிராகரித்தார். சந்திரிகா அம்மையாரிடம் கபடமான உள்நோக்கங்கள் இருந்தன என புலிகளை அது கருத வைத்தது. புலிகளின் போரிடும் வல்லைமையைத் தகர்த்த பின்னரே அவர்களை பேச்சு மேசையில் சந்திப்பது என்ற தனது 'சமாதானத்துக்கான போர்' மூலோபாயத் திட்டத்தைக் கைவிட அவர் தயாராக இல்லை. ஏற்கனவே, சந்தித்திருந்த அவமானகரமான இராணுவத் தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்காமல் சந்திரிகா அம்மையாரும் அவரது போர்த்துறை அதிபதிகளும் ஆனையிறவை மீளக் கைப்பற்றும் ஒரு பெரும் அதிரடிப் படையெடுப்புக்குத் திட்டம் தீட்டினர்.

ஆனால், புலிகளின் தலைமையோ, சந்திரிகா அம்மையார் சாதகமாகப் பதிலளிப்பார் என்ற நம்பிக்கையுடன் சிங்களப் படையினரின் அதி தீவிரமான ஆத்திரம் ஊட்டும் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் - தமது ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை நான்கு தடவைகளாக நீடித்து, நான்கு மாதங்கள் கடைப்பிடித்தது. ஆனால், சமாதானத்துக்கான வழியைத் தேர்வுசெய்வதற்கு மாறாக, சிறீலங்கா அரசு ஒரு கடும்போக்கான நிலைப்பாட்டையே எடுக்கின்றது என்பது ஐயமற தெளிவாகியபோது, தங்களது ஒருதலைப்பட்சமான போர் ஓய்வுப் பிரகடனத்தை 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் நள்ளிரவில் இருந்து மீளப்பெற புலிகள் இயக்கம் தீர்மானித்தது. வன்னியில் - தமது தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிக்கையில் அவர்கள் பின்வருமாறு விளக்கினர்:-

*''சிறீலங்கா அரசு எமது சமாதான முயற்சிக்கு ஆக்கபூர்வமான பதில் தர மறுப்பதுடன், தரையாலும் கடலாலும் ஆகாயத்திலிருந்தும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, எமது தரப்பில் பெரும் உயிர்ச் சேதத்தை விளைவித்துக் கடும் போக்கைக் கடைப்பிடித்தமையால், நாம் இந்த வேதனைக்குரிய முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். பதில் தாக்குதல் நடவடிக்கைகளை எடுக்காது, சுயமான முறையில் நாம் அமைதியைப் பேணியமையால் எதிரியின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை களைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம் ஆயிற்று. எமது ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை எதிரிப் படைகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திவரும் ஆபத்தான சூழ்நிலையில் நாம் தொடர்ந்து அமைதி பேணிவருகின்றமை சாத்தியமற்றது.*

*கடந்த நான்கு மாத காலமாக, சுயமாக நாம் செய்துகொண்ட போர்நிறுத்தத்தின்போது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களை இழந்து இராணுவ ரீதியிலான பின்னடைவுகளை நாம் சந்தித்தமையுடன், கணிசமான உயிர்இழப்பும் எமக்கு ஏற்பட்டது. 160 போராளிகளை நாம் பலி கொடுத்தமையுடன், 400 பேருக்குக் காயம் ஏற்பட்டது. முல்லைத்தீவிலும் திருகோணமலையிலும் உள்ள கரையோர கிராமங்கள் தொடர்ச்சியான, தீவிரமான விமானக் குண்டு வீச்சுகளுக்கு இலக்காகியமையால் பெருமளவு உயிர் இழப்புகளும் சொத்துகளுக்குப் பெரும் சேதமும் ஏற்பட்டன. நாம் போர் நிறுத்தத்தைக் கண்டிப்பான முறையில் இறுக்கமாகப் பேணி வந்தமையால் எமது போராளிகளுக்கு ஆத்திரமூட்டி, அவர்களை விரக்தி கொள்ளச் செய்யும் நோக்கத்துடன் அரச ஆயுதப் படைகள் தொடர்ச்சியான பகை நடவடிக்கைகளில் ஈடுபட்டன. அத்தோடு, இக் கால கட்டத்தில், சிறிலங்கா அரசு நாசகார ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ததுடன், ஒருபெரும்போர்நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் தனது ஆயுதப் படைகளை நவீனமயப்படுத்திப் பலப்படுத்தி வந்துள்ளது. ஆனால், எம்மைப் பொறுத்தவரை நோர்வே அரசின் சமாதான முயற்சிகளுக்கு நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறோம். சமாதானப் பேச்சுகளுக்கான ஒரு நல்லெண்ணச் சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடனேயே கடந்த நான்கு மாதங்களாக நாம் அமைதி பேணினோம்.*

*சிறிலங்கா அரசு எமது ஆக்கபூர்வமான நல்லெண்ண நோக்கத்தின் அர்த்தத்தை புரிந்து கொள்ளத் தவறியதால் எமது அமைதி முயற்சி அர்த்தமற்றதாகியது. இதனால் தன்னிச்சையாக நாம் பிரகடனம் செய்த போர் நிறுத்தத்தைக் கைவிட நிர்ப்பந்திக்கப்பட்டபொழுதும், சமாதானத்திலும் சிக்கலான இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் மார்க்கத்திலும் நாம் உறுதி கொண்டு நிற்கின்றோம். தமிழ்த் தேசிய நெருக்கடிக்கு அமைதி வழியில் தீர்வுகாண நோர்வே அரசு விடா முயற்சியுடன் மேற்கொண்டு வரும் உன்னதமான முயற்சிக்கு எமது விடுதலை இயக்கம் தொடர்ந்தும் தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி வரும்.''*



(தொடரும்...)





கச்சாய் பாதாள வைரவர் ஆலய சித்திரைப் பரணி உற்சவம் அண்மையில் இடம்பெற்றது. சுவாமி விதி உலா வந்த வேளையில் எடுக்கப்பட்ட இரு படங்களை இங்கே காணலாம். (எ-21)



போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புலம்பெயர்ந்த தாயக உறவுகளால் உதவி வழங்கும் செயற்றிட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுதாவளை மத்தி, வன்னியர் வீதியைச் சேர்ந்த திருமதி கருணாகரன் சந்திரேஸ்வரியின் குடும்பத்தின் வாழ்வாதாரத் தொழிலாகிய விவசாயத்தை மேம்படுத்துவதற்காக மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றும், அதற்குரிய உபகரணங்களையும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட் அரசியல் பிரிவு) சுவிஸ் கிளைத் தோழர்களான ரதீஸ்வரன் , செல்வபாலன், ராஜேந்திரம் ஆகியோர் வழங்கினர். (ஐ)








யாழ். பிரதேச கலாசார அதிகார சபை யாழ். கிராம மாதர் அபிவிருத்தி சங்க சமாசத்துடன் இணைந்து தேசிய உணவு மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் சந்தையையும் பாரம்பரிய விளையாட்டு விழாவையும் அண்மையில் யாழ். அடைக்கல மாதா ஆலய வளாகத்தில் நடத்தியிருந்தன. அருட்பணி ஜோன் பப்ரிஸ் அன்ரனி, மௌலவி ஏ.அஸிஸ் மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் கலாசார அதிகாரசபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர். (எ-19)



யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தின் மாதாந்த கூட்டம் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ-19)







யாழ். கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 110 பேருக்கு மூக்குக் கண்ணாடியும், 250 பேருக்கு நீரிழிவு மற்றும் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன. இதில் யாழ். பேராலய பங்குத் தந்தை, யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி வைத்தியர் போ.ஜெஸீதரன் மற்றும் ரீ.மைக்கல் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-19)






மண்கும்பான் சாட்டி வெள்ளைக் கடற்கரை பள்ளிவாச பாரம்பரியமா பனையோலையில் (பிளா சோறு) விருந்து வழங்கும் நிகழ்வும் யாழ். முஸ்லிம்களின் ஒன்றுகூடலும் அண்மையில் நடைபெற்றன. ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ், முஸ்லிம் மக்கள் இதில் கலந்து கொண்டனர். (ஐ-19)



# ரணில் – மோடி சந்திப்பு: உறவில் திடீர் திருப்பம்!



கடந்த வாரம் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குத் தனது மூன்றாவது பயணத்தை மேற்கொண்ட போது, புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பு ஜனவரி மாதம் 2015ஆம் ஆண்டில் சிறிலங்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான தொடர்பு மீண்டும் புதுப்பிக்கப்படுகின்றது என்பதற்கான சான்றாக அமைகின்றது. இவ்விரு நாடுகளின் தலைவர்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாகப் பொருளாதார மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும், சிறப்புப் பொருளாதார வலயங்களுக்கு சக்தி மற்றும் கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நீண்ட கால ஒத்துழைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

அதிகாரம் மிக்க அதிபரான மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியுற்றமையின் பின்னர், சிறி லங்கா தொடர்பான இந்தியாவின் கோட்பாடு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்புக் கரிசனைகளை மையப்படுத்தியதாகவும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் அக்கறை காண்பிக்காத நிலைமையும் காணப்படுகின்றமை உண்மையில் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல.

**சீன பிரசன்னத்துக்கு மத்தியில் உறவு நிலை**

இந்த அடிப்படையில், இந்தியா மற்றும் சிறிலங்கா ஆகிய இரு நாடுகளுக்கும் பரஸ்பர சமரசங்களை எட்டுவதற்கு முக்கிய பங்காற்றக் கூடிய சிறப்புத் திட்டங்கள் தொடர்பாக இரு நாடுகளின் பிரதமர்களும் பேச்சுக்களை நடத்தியிருந்தனர். சிறிலங்காவின் வரலாற்றில் ஒருபோதுமில்லாதவாறு தற்போது அதிகரித்துள்ள சீனாவின் பிரசன்னத்தை முறியடிப்பதற்காக இந்தியா சிறி லங்காவில் தனது திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும் என்பதை உணர்ந்துள்ளது.

இந்த வகையில், இந்தியா தற்போது திருகோணமலை மீது தனது கவனத்தைக் குவித்துள்ளது. சிறிலங்காவின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள திருகோணமலையில் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது உருவாக்கப்பட்ட பெற்றோலியசேமிப்புமையத்தை மீண்டும் புதுப்பிப்பதுடன் இந்த இடத்தைச் சூழவும் கட்டுமான வசதிகளை மேற்கொள்கின்றமை தொடர்பாகவும் இந்தியாவும் சிறிலங்காவும் உடன்பட்டன.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் விரிவாக்கப்படும் பொருளாதார மற்றும் அபிவிருத்தி உறவுநிலைமை வரவேற்கத்தக்கதாகும். அத்துடன், இது அயல் நாடுகளுக்கும் மிகவும் முக்கியமானதாகும். ஆனால், இவ்விரு நாடுகளும் இலங்கைத் தீவு மீதான பாரம்பரிய அரசியல் விவகாரங்களைப் புறந்தள்ளக் கூடாது.

தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் இலங்கைத் தீவின் கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசங்களில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் இங்கு இன்னமும் இயல்பு வாழ்க்கை மீளத் திரும்பவில்லை. இந்நிலையில், இந்தியா சிறிலங்காவுடன் இவ்வாறான அரசியல் விவகாரங்களைப் பேசுவதில் ஆர்வம் காண்பிக்காது இருக்கக்கூடாது.

சிறிலங்காவில் தமிழ் மக்களின் காணாமற்போன உறவுகள் தொடர்பாகவும் அவர்களின் நிலங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்றமை தொடர்பாகவும் பதிலளிக்க வேண்டும் எனக் கோரி பல நூற்றுக்கணக்கான மக்கள் பல்வேறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அனைத்துக் குடிமக்களுக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்படுகின்றமை புதிய அரசமைப்பில் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வாக்குறுதி வழங்கிய போதிலும் இன்னமும் அது நிறைவேற்றப்படவில்லை.

சிறிலங்காவின் அரசியல் பிரச்சினையில் நீண்ட காலமாக சமரசவாளராகச் செயற்படும் இந்தியா, தற்போது சிறிலங்காவில் தொடரும் அரசியல்சார் பிரச்சினைகள் தொடர்பாக நெருக்கமான கண்காணிப்புக்களை மேற்கொள்வதுடன், கவனத்திற் கொள்ளப்படாத பல்வேறு விடயங்களையும் கருத்திற் கொள்வதன் மூலம் புனிதமானதொரு உறவைக் கட்டியெழுப்புவதில் இந்தியா அக்கறை செலுத்த வேண்டும்.

சிறிலங்காவின் அபிவிருத்திக்காக 260 கோடி பில்லியன் டொலர் நிதியை வழங்குவதாக இந்தியா வாக்குறுதியளித்துள்ள அதேவேளையில், போரால் பாதிக்கப்பட்ட வடக்கின் பிரதான வாழ்வாதாரத் தொழில்களாகக் காணப்படும் விவசாயம் மற்றும் மீன்பிடி போன்றவற்றை மேம்படுத்துவதை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

இவ்விரு நாடுகளின் மீனவர்களுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தும் பாக்கு நீரிணை எல்லை விவகாரத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறிலங்கா கடல் எல்லைக்குள் தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பாக சிறிலங்கா வாழ் தமிழ் மீனவர்கள் மத்தியில் காணப்படும் பிரச்சினைக்கு இந்தியாவின் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும்.

போரினால் அழிவடைந்த மற்றும் செயலிழந்த பல்வேறு தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வைப்பதில் இந்தியா கவனத்தைச் செலுத்துவதுடன் இதற்காக முதலீடுகளையும் மேற்கொள்ள வேண்டும். சிறிலங்காவில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது தொடர்பான புதுடில்லியின் கவலையை நியாயப்படுத்த முடிந்தாலும் கூட, சீனாவின் செயல்களின் ஊடாக சிறிலங்காவை மதிப்பீடு செய்வதை இந்தியா நிறுத்த வேண்டும்.

சிறிலங்கா தான் விரும்பும் எந்தவொரு நாட்டுடனும் தொடர்பைப் பேணுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. ஆகவே, இந்தியா சிறிலங்காவை தனக்குச் சமமான பங்காளி நாடாகக் கருதி உறவைப் பேணும் போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்பு உருவாகும்.

வழிமூலம் - தி ஹிந்து
(ஆசிரியர் தலையங்கம்)
மொழியாக்கம் -
நித்தியபாரதி

# வாசகர் கருத்து மேடை



## கடைகளில் விலைப்பட்டியல் காட்சிக்கு வைப்பது அவசியம்

தென்மராட்சிப் பகுதியில் உள்ள பெரும்பாலான சிற்றுண்டிச் சாலைகளில் உணவுப் பொருள்களின் விலைகளில் மாற்றமும் விலைப்பட்டியல் இல்லாமம் உள்ளமையால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனால் உணவக உரிமையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் வாய்த்தகராறு ஏற்படுகின்றமையைக் காண முடிகிறது.

அண்மையில் கொடிகாமம் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பொதுமகன் ஒருவர் சிப்பந்தியிடம் வடை என்ன விலை எனக்கேட்க, 20 ரூபா என்று கூறியதும் இரண்டு வடைகளைச் சாப்பிட்டு விட்டு காசாளரிடம் 40 ரூபாவைக் கொடுத்துள்ளார். அவரோ இன்னும் பத்து ரூபா தாரும் என்றார்.

''இப்பதான் வடை 20 ரூபா என்றார். நீங்கள் 25 ரூபா என்கிறீர்களே! என்ன இது?'' என்றார் கடைக்கு வந்து வடை சாப்பிட்டவர். அதற்கு காசாளர் தம்பி இவர் (சிப்பந்தி) இன்று தான் வேலையில் இணைந்துள்ளார். அதனால் அவர் தவறாகக் கூறிவிட்டார் என்றார் காசாளர்.

இவ்வாறான சிக்கல்களைத் தவிர்க்க உணவக உரிமையாளர்கள் சிற்றுண்டிகளின் விலைப்பட்டியலைக் காட்சிக்கு வைப்பது அவசியம். ஏன் கட்டாயமும் கூட.

வர்த்தகர்களில் சிலர் விலைப்பட்டியல் வைப்பதில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் வீண் வாக்குவாதங்கள் ஏற்பட்டு விபரீதங்கள் கூட நிகழ்ந்து விடலாம்.

விலைப்பட்டியல் வைக்கத் தவறுவோர். மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா?

வரணி வடக்கு —'அன்பு' சந்திரன்

# அம்பாந்தோட்டை இரட்டைக்கொலை: விசாரணைக்கு பொலிஸ்குழுக்கள்

கொழும்பு, மே 04

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டை - ஹுங் கம பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணி அளவில் இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தநிலையில், அந்த பகுதியில் வீடு ஒன்றில் இருந்து 72 வயதான தாயும் அவரது 39 வயதான மகளும் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட மகள் 5 மாத கர்ப்பிணி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரட்டைக் கொலைகளுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இந்த நிலையிலேயே இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (எ)

# ஒருதொகை கேரள கஞ்சாவுடன் வில்பத்து அருகில் நால்வர் கைது!



கொழும்பு, மே 04

வில்பத்து வனப்பகுதிக்கு அருகில் ஒருதொகை கேரளக் கஞ்சாவுடன் நால்வர் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கல்பிட்டி பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே அந்த நால்வரும் 200 கிலோ கிராம் கேரளக்கஞ்சாவுடன்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

அந்த சந்தேகநபர்கள் நால்வரும் 7 பொதிகளடங்கிய கேரளக்கஞ்சாவுடன் வில்பத்து, களுவரகுடா பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைக்காக கல்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்து வருகிறோம் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (எ)

# சசிகலா தனி அறைக்கு மாற்றம்!



பெங்களூர்,மே 04

சொத்துக் குவிப்பு வழக்கில் கைதுசெய்யப்பட்டு பெங்களூர் பரப்பன அக்ரஹார்ரா சிறையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலா நடராசன் தற்போது தனி அறைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சசிகலா சிறைச்சாலை அறை எண் 2 இல் இருந்து, தற்போது சிறைச்சாலை அறை எண் 4 இல் ஓர் அறைக்கு மாற்றப்பட்டுள்ளார் என சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இளவரசியுடன் ஓர் அறையில் இருந்த சசிகலா சுமார் இரண்டு மாதங்களுக்கு பின்னர் திடீரென வேறு அறைக்கு மாற்றப்பட்டமை தொடர்பில் பல சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், சசிகலா தன்னை பார்க்க வருபவர்களை சந்திக்க வெளியில் வரும்போது கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதால் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் கைதுசெய்யப்பட்ட சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று பெங்களூர் பரப்பன அக்ரஹார்ரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 'இரட்டை இலை'யை மீட்பதில் தொடர்ந்தும் இழுபறி நிலை!

## இரு அணிகளுக்கும் நிர்வாகிகளின் ஆதரவால்

அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கும் ஆதரவு தெரிவித்து, கட்சிநிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்திடுகின்றமையால், இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதில் சிக்கல் அதிகரித்துள்ளது.

இரட்டை இலைச் சின்னத்துக்கு உரிமை கோரி, பன்னீர் அணி சார்பில் 45 லட்சம் பேரின் பிரமாண வாக்குமூலத்தைத் தேர்தல் ஆணையகத்தில் தாக்கல் செய்தனர் பன்னீர் அணியினர் இதனை அடுத்து, கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்ய சசிகலா அணி அவகாசம் கோரியது.

அதை ஏற்றுத் தேர்தல் ஆணையகம் அவகாசம் வழங்கியது. தற்போது, சசிகலா அணியினர் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களிடம் பிரமாண வாக்குமூலத்தில் கையெழுத்து பெற்று வருகின்றனர். அதில் பொதுச்செயலர் சசிகலா, துணைப் பொதுச்செயலர் தினகரன், சட்டசபை கட்சி தலைவரான முதல்வர் பழனிச்சாமி ஆகியோருக்கு ஆதரவு அளிக்க ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பன்னீர் அணியினரும் பிரமாண வாக்கு மூலத்தில் கையெழுத்து பெற்று வருகின்றனர். கீழ்மட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களில் பெரும்பாலானோர் பன்னீர் அணிக்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்டு வருகின்றனர். அதேபோல், சசிகலா அணி பிரமாண வாக்கு மூலத்தில் கையெழுத்திட்டவர்கள் பன்னீர் அணி பிரமாண வாக்கு மூலத்திலும், கையெழுத்திடுகின்றனர்.

இது இரு அணி நிர்வாகிகளுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே ஓர் அணிக்கு ஆதரவாக கையெழுத்து போட்டிருந்தாலும் இதிலும் கையெழுத்திடுமாறு, மாவட்ட நிர்வாகிகள் வற்புறுத்துகின்றனர்.

அதனால், தவிர்க்க முடியவில்லை என கீழ்மட்ட நிர்வாகிகள் கூறுகின்றனர்.

அனைத்து நிர்வாகிகளிடமும் இரு அணி தரப்பிலும் பிரமாண வாக்குமூலம் பெறப்பட்டு உள்ளதால் இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதில் சிக்கல் அதிகரிக்கும் நிலை உருவாகி உள்ளது. (ச)

# 'ஜெ'இன் சிகிச்சைப் படங்கள் விரைவில் வெளியிடப்படும்!

## அ.தி.மு.க. அம்மா அணிச் செயலாளர் புகழேந்தி

ஜெயலலிதாவின் சிகிச்சை புகைப்படங்கள் விரைவில் வெளியிடப்படும். அவைவெளியானால் எல்லா உண்மையும் வெளிச்சத்துக்கு வரும் என்று கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணியின் செயலாளர் புகழேந்தி தெரிவித்தார்.

அ.தி.மு.க (அம்மா) அணியின் துணை பொதுச் செயலர் தினகரனுக்கு ஆதரவாகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் மதுரையில் நேற்று அ.தி.மு.க. தொண்டர் ஒழுங்கிணைப்புக் குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கர்நாடக மாநில அ.தி.மு.க. அம்மா அணி செயலாளர் புகழேந்தி கலந்துகொண்டார். இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு முறையான சிகிச்சையே அளிக்கப்பட்டது. மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படும்போது அருகில் இருந்த ஓ.பன்னீர் செல்வம் இப்போது மத்திய புலனாய்வுத்துறையின் விசாரணை தேவை என்கிறார்.

ஜெயலலிதாவின் சிகிச்சைப் புகைப்படங்கள் வெளியிட அனுமதிக்காக காத்திருக்கிறோம். பொறுத்திருந்து பாருங்கள். அந்தப் புகைப்படங்கள் வெளியானால் எல்லா உண்மையும் வெளிச்சத்துக்கு வரும். அப்போது பலரது முகத்திரை கிழியும்.- என்றார். (ச)

## கேரளாவில் பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருந்த வீதி!



கேரள மாநிலம் வயநாடு பகுதியில் கடந்த திங்கள்கிழமை இரவு கோடை மழையுடன், ஆலங்கட்டி மழையும் பெய்துள்ளது. இதனால் 12 மணித்தியாலங்களுக்கு மேல் பனிகட்டிகளால் மூடப்பட்டிருந்த வீதியைப் படத்தில் காணலாம். (ச)

# தினகரனுக்கு மேலும் சிக்கல் பண மோசடி வழக்கும் தாக்கல்!

புதுடில்லி,மே 04

அந்நிய செலாவணி மோசடி வழக்கு, தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கு ஆகியனவற்றைத் தொடர்ந்து, சசிகலா அக்கா மகன் தினகரன் மீது அமலாக்கத் துறையும், பண மோசடி வழக் கைத் தொடர்ந்துள்ளது. தின கரன் சட்டவிரோதமாக வாங்கிக் குவித்துள்ள சொத்துக்களை முடக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசு அமைப்பான அமலாக்கத் துறையும் கடந்த வாரம், டில்லி பொலிஸாருடன் ஆலோசனை நடத்தியுள்ளது.

அதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றமையில் நடந்துள்ள பண மோசடி தொடர்பாக அமலாக்கத் துறை வழக்கு பதிவு செய்துள்ளது. தினகரன், அவரது நண்பர் மல்லிகார்ஜுனா, சுகேஷ் சந்தர் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடக்கிறது. விரைவில், இது தொடர்பாக, இவர்களுக்கு, 'நோட்டீஸ்' அனுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண மோசடி செய்து சம்பாதித்த பணத்தில், தினகரன் பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளமை குறித்து, அமலாக்கத் துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

இந்த மோசடி சொத்துக்களை முடக்கி வைக்க உத்தரவிடும் அதிகாரம் அமலாக்கத் துறைக்கு உள்ளது. அதனால், விரைவில் இதற்கான உத்தரவுகள் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# அசாமில் காணி உரிமம் இன்றி எட்டு லட்சம் குடும்பங்கள்!

அசாம்,மே 04

அசாம் மாநிலத்தில் நில உரிமையை ஒழுங்குபடுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட ஆய்வில், சுமார் 8 லட்சம் குடும்பங்கள் காணி உரிமம் இன்றி வாழ்ந்து வருகின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அசாம் மாநிலத்தில் நில உரிமையை ஒழுங்குபடுத்துவதற்காக முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஹரி சங்கர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு அசாம் மாநிலத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்தோடு, அசாம் மாநிலத்தில் உள்ள 70 வீதமான நிலப்பகுதிகளுக்கு வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களே உரிமை கொண்டிருக்கின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி 8 லட்சம் குடும்பங்களுக்கும் சொந்தமாக ஒரு சிறிய அளவிலான நிலப்பகுதி கூட இல்லை என்றும், நிலத்தை உரிமை கோருபவர்களில் 90 சதவீதமானவர்கள் முறையாக பதிவுசெய்யப்பட்ட காணி உரிமங்களைப் பெறவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (ச)

# வீதியில் பெண்கள் கைபேசியில் பேசினால் 21 ஆயிரம் ரூபா அபராதம்!

உத்தரப்பிரதேசத்தில் உள்ள மதுரா மாவட்டத்தில் உள்ள மடோரா என்னும் கிராமப் பஞ்சாயத்தில், வீதியில் நடந்தபடி கைபேசியில் பேசும் பெண்களுக்கு 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்க பஞ்சாயத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது

உத்தரப்பிரதேசத்தில் பெரிய கிராமங்களில் ஒன்றான மதுராவில் நேற்றுமுன்தினம் பஞ்சாயத்து கூட்டப்பட்டது. பஞ்சாயத்து உறுப்பினர்கள் பல்வேறு முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தனர். இதன்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பெண்களின் கவனக் குறைவைப் போக்கவே இந்த உத்தரவு என பஞ்சாயத்துத் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், பசு வதை செய்வோருக்கு 2 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது.

இந்த உத்தரவுகளால் தற்போது மதுரா கிராமம் பிரபலமாகி விட்டது. கடந்த 2014 ஆம் ஆண்டு மதுராவில் லோக்சபா தேர்தலின்போது, வீதிகள் அமைக்கப்படவில்லை என்பதற்காக 2 ஆயிரம் பேர் தேர்தலில் வாக்களிக்கவில்லை. எனவே, அதிரடி காட்டுவது ஒன்றும் மதுராவுக்கு புதிதல்ல. (ச)



## கொலம்பியாவில் நிலநடுக்கம்!

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் மற்றும் யூக்கான் ஆகிய பகுதிகளில் 6.2 ரிச்டர் அளவில் பெரிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் எதிரொலியாக அந்தப் பகுதிகளில் மின்சாரம் துண்டிக் கப்பட்டதுடன், பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. எனினும், இந்த அனர்த்தத்தால் பெரிய சேதங்கள் எவையும் இடம்பெறவில்லை என்று அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், நிலநடுக்கம் ஏற்பட்டு நான்கு மணி நேரத்துக்குப் பின்னர் 50 அதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன எனவும் புவியியல் மையம் அறிவித்துள்ளது.

இவ்வாறாக அதிர்வுகள் தொடர்ந்து வந்த நிலையில், யூக்கான் பகுதியில் அவசர கால ஒருங்கிணைப்பு மையம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

# சிரியாவில் ஐ.எஸ். தாக்குதல்; படையினர் உட்பட 32 பேர் சாவு!

சிரியா,மே 04

வடக்கு சிரியாவில் அமெரிக்க ஆதரவு பெற்ற படையினர் வசமிருந்த ராஜ்ம் அல் - சலீபி பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் பொதுமக்கள் உட்பட சிரிய படையினர் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டுள்ளது என சிரியாவின் மனித உரிமைகள் தொடர்பில் கண்காணிக்கும் குழு தெரிவித்துள்ளது.



ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் சிரிய படையினருக்கும் இடையில் அதிகாலை முதல் தீவிர தாக்குதல்கள் நடைபெற்று வந்த நிலையிலேயே, இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.


இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பொதுமக்கள் சிலரும் உள்ளடங்குகின்றனர் என சிரிய படையின் ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் சிரிய படையினருக்கும் இடையில் நடைபெற்று வரும் தாக்குதல்களினால் சிரியாவின் பல முக்கிய நகரங்கள் சேதமுற்றுள்ளன.

இந்நிலையில், கடந்த வாரம் சிரிய படையினரால் மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதலைத் தொடர்ந்து ரக்காவின் மேற்கில் அமைந்துள்ள டப்கா நகர் வெற்றிகரமாக கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிரியாவில் போர் நிறுத்த நடைமுறைக்கு அழுத்தம் கொடுக்க ட்ரம்ப்-புடின் சம்மதம்

### தொலைபேசியில் உரையாடியதை அடுத்து



வொஷிங்டன், மே 04

சிரியாவில் போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இருநாட்டுத்தலைவர்களுக்கும் இடையில் இடம் பெற்ற தொலைபேசி உரையாடலின் போது மேற்படி சம்மதம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

மிக நீண்டகாலமாக துன்பங்களை அனுபவித்து வரும் சிரியாவில் வன்முறைகளுக்கு முடிவுகட்டும் வகையில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேலும், இருநாட்டு தலைவர்களுக்கும் இடையிலான உரையாடல், சிரியாவில் நீடித்த சமாதானத்தை அடைவதற்காக பாதுகாப்பான மற்றும் விரிவான கலந்துரையாடலாக அமைந்திருந்தது.

அதேபோன்று சிரியாவில் போர் நிறுத்தத்தை வலுப்படுத்தும் வழிகளைக் கண்டறியும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இருதரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேற்படி தொலைபேசி உரையாடலின்போது வட கொரிய விவகாரம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.-என்றுள்ளது. (எ)

## ரயில் சுரங்கத்தில் வெடிப்பு; சீனாவில் 12 பேர் உயிரிழப்பு!



சீனா, மே 04

தென்மேற்கு சீனாவின் கியுஸூ மாகாணத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ரயில்வே சுரங்கப்பாதையில் ஏற்பட்ட மீத்தேன் வெடிப்பில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அரச ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதிவேக ரயில் போக்குவரத்துக்காக கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த சுரங்கப்பாதையிலேயே இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதன்போது கட்டுமானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று முதல் சுமார் 2 ஆயிரம் மீட்புப் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த வெடிப்புச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ராணுவத் தளம் மீது ஐ.எஸ்.தாக்கு; ஈராக் படையினர் 10 பேர் பலி!

பக்தாத், மே 04

ஈராக் இராணுவத் தளத்தில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 10 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 6 வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கில் அன்பார் மாகாணத்தில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்கள் அங்கு பாதுகாப்பு படையினரையும், பொலிஸாரையும் குறிவைத்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், அன்பார் மாகாணத்தின் மேற்கு பகுதியில் அல் ரூட்டா என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவத் தளத்தில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் நேற்றுமுன்தினம் புகுந்து காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் ராணுவ வீரர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர். 6 வீரர்கள் படுகாயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் அங்கிருந்து தப்பி விட்டனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதற்கிடையே ஈராக் அரசு எண்ணெய் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி முகமது யூனிஸ் நேற்றுமுன்தினம் கிர்குக் நகரில் உள்ள தனது அலுவலகத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

அந்த நேரம் அதிவேகமாக வந்த காரில் இருந்த மர்ம நபர்கள், முகமது யூனிசையும், அவரது சாரதியையும் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பினர்.

கொல்லப்பட்ட அதிகாரி குர்து இனத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும்பொறுப்பேற்கவில்லை. (எ)


### நேட்டோ படையினரை இலக்கு வைத்து

## காபூலில் கார்க் குண்டு வெடிப்பு; 8 பேர் மரணம்; 28 பேர் படுகாயம்!

காபூல்,மே 04

ஆப்கான் தலைநகர் காபூலில் நேட்டோ தலைமையிலான ஆதரவுப் படையினரின் கவச வாகனங்களை இலக்கு வைத்து நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்ற தற்கொலை கார் வெடிகுண்டுத் தாக்குதலில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளனர். 28 பேர் காயமடைந்தனர் என ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தானிஷ் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்கள் பாதுகாப்புப் படையினரா இல்லை பொதுமக்களா என்பது தெரியவில்லை. இதற்கிடையே உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.



மேற்படி தாக்குதலில் மூன்று அமெரிக்க படையினர் காயமடைந்துள்ளனர் என நேட்டோ ஆதரவுப் படையின் அமெரிக்க கடற்படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத இயக்கமும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை, இருப்பினும் தலிபான் பயங்கரவாத இயக்கம் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

சமீபகாலமாக ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பனங்கட்டிகொட்டு கிராமத்தில் மின்னொளியில் உதைபந்தாட்டம்





மே தினத்தினை முன்னிட்டு பனங்கட்டி கொட்டு இளைஞர்களினால் கிராம மக்களை ஒன்று திரட்டி விசேட உதைபந்தாட்ட நிகழ்வொன்று கடந்த 30ஆம் திகதி இரவு 7.00 மணியளவில் மின்னொளியில் நடத்தப்பட்டது. உதைபந்தாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் விசேட விருந்தினர்களாக கிராமத்தின் மூத்த உறுப்பினர் களான சுதாகர், செல்வம், பர்னாந்து ஜேசுதாசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

உதைபந்தாட்டப் போட்டிகள் கொண்டு இரண்டு பிரிவுகளாக குறிப்பாக 15 வயதுக்குட்பட்ட மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட பிரிவுகளாக நடைபெற்றன. இதில் 14 அணிகள் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். வெற்றியீட்டிய கழகங்களுக்கு பதக்கங்களும், வெற்றிக் கேடயங்களும் அமைச்சரினால் வழங்கப்பட்டன.

# 20 ஓவர் அணிகளின் தரவரிசையில் நியூஸிலாந்துக்கு முதலாவது இடம்


குறிப்பிட்ட காலத்தில் நடந்த போட்டிகளின் முடிவுகள் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆண்டுதோறும் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) அறிவிப்பது வழக்கம்.

நேற்று வெளியான 20 ஓவர் அணிகளின் தரவரிசையில் இந்திய அணி 6 புள்ளிகளை இழந்து மொத்தம் 118 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. நியூஸிலாந்து அணி 125 புள்ளி முதலிடத்தில் நீடிக்கிறது. 7 புள்ளிகளை கூடுதலாக பெற்று 3 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ள இங்கிலாந்து 121 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது. 3ஆவது இடத்தில் பாகிஸ்தானும், 5 ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவும், 6 ஆவது இடத்தில் ஆஸ்திரேலியாவும், உலக சம்பியன் மேற்கிந்தியத்தீவுகள் 7ஆவது இடத்திலும், இலங்கை அணி 8ஆவது இடத்திலும் உள்ளன.

2013 ஆம் ஆண்டு மே மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலான 20 ஓவர் போட்டிகளின் முடிவுகள் நீக்கப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டு மே முதல் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் வரையிலான போட்டிகளின் முடிவுகள் 50 சத வீதமும், 2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து தற்போது வரையிலான ஆட்டங்களின் முடிவுகள் முழுமையாகவும் கணக்கிடப்பட்டு அதன் அடிப்படையில் மேற்கண்ட தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அருவா மீசை, ஆட்டுத் தாடி என வித்தியாசமான 'ஸ்டைலில்' வீரர்கள்!

## கோஹ்லிக்கு மட்டும் அனுஷ்கா தடை





ஐ.பி.எல். தொடரில் அருவா மீசை, ஆட்டுத்தாடி என, வித்தியாசமாக காணப்படுகின்றனர் இந்திய வீரர்கள். இந்த வரிசையில் இணைய நினைத்த கோஹ்லியை, அவரது தோழி நடிகை அனுஷ்கா சர்மா எச்சரித்துள்ளார்.

கால்பந்து நட்சத்திரங்கள் பொதுவாக சீசனுக்கு ஏற்ப வெவ்வேறு ஸ்டைல் சிகை அலங்காரத்துடன் காணப்படுவர். இது ரசிகர்களிடம் பெரும் வரவேற்பு பெறும்.

### டோனி ஸ்டைல்

இதேபோல கிரிக்கெட்டிலும் உண்டு. இந்திய அணி முன்னாள் தலைவர் டோனி ஆரம்ப காலத்தில் கழுத்து வரை கூந்தல் வளர்த்தார். பின், மொட்டை அடித்தார். அடுத்து கீரிப்பிள்ளை ஸ்டைல் என மாறிக் கொண்டே இருந்தார்.

இந்நிலையில் கோஹ்லி அணித் தலைவரான பிறகு தாடி வளர்க்கத் தொடங்கினார். இதன் பின் சக வீரர்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை, தலைவன் எவ்வழியோ தொண்டனும் அவ்வழி என பெரும்பாலான வீரர்கள் ஆஸ்திரேலிய தொடரின் போது தாடியுடன் காணப்பட்டனர்.

இதில் குஜராத்தின் ஜடேஜா, ஹார்திக் பாண்ட்யா என இருவரும் இந்திய அணியின் தவிர்க்கமுடியாத, நம்பிக்கைக்கு உரிய பல்துறை வீரர்கள். அவ்வப்போது இருவரும் தலை ஸ்டைலை மாற்றுவதுண்டு.

அருவா மீசை:

இம்முறை குஜராத் அணியின் ஜடேஜா அருவா மீசை ஸ்டைலுக்கு மாறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட இன்ஸ்டாகிராம் செய்தியில்-

''இது மாற்றத்துக்கான நேரம். எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்தால் வீரர்கள் அறையில் குழப்பம் வந்து விடக் கூடாது அல்லவா?. களத்தில் போட்டிகள் மாறி விட்டன. இதனால், வீரர்கள் அறையில் அவர்களது முகமும் மாறுகிறது'' என தெரிவித்துள்ளார்.


இதேபோல, ஆட்டுத்தாடி, மீசையுடன் காணப்படும் மும்பை அணி வீரர் ஹார்திக் பாண்ட்யா வெளியிட்ட செய்தியில்-

இப்போது எங்களது வீரர்கள் அறையில் எவ்வித குழப்பமும் இல்லை எனத் தெரிவித்தார்.

இவ்வரிசையில் ரோகித் சர்மாவும் (மும்பை) இணைந்தார். கடைசியாக புனே அணி வீரர் ரகானே, மீசை, தாடியை ஷேவ் செய்து உதட்டருகே மட்டும் சிறிது தாடி வைத்து, பார்க்க சிறு பையன் போல காணப்படுகிறார்.

இந்திய வீரர்களில் புதிய ஸ்டைலில் இணைய விரும்பினார் அணித்தலைவர் கோஹ்லி. இதற்கு அவரதுதோழி, பொலிவுட் நடிகை அனுஷ்கா சர்மா உடனடியாக தடை போட்டு விட்டார். இதை அடுத்து முடிவை மாற்றிக்கொண்ட கோஹ்லி கூறுகையில்-

''சாரி போய்ஸ்... எனது தாடியை உங்களைப் போல மாற்றும் எண்ணம் இல்லை' எனத் தெரிவித்துள்ளார்.



''இது மாற்றத்துக்கான நேரம். எல்லோரும் ஒரே மாதிரியாக இருந்தால் வீரர்கள் அறையில் குழப்பம் வந்து விடக் கூடாது அல்லவா?.''

# சன்ரைசஸ் அணியை வீழ்த்தியது டெல்லி டேர்டெவில்ஸ்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் 40 ஆவது லீக் ஆட்டத்தில் சன் ரைசஸ் ஹைதராபாத் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது டெல்லி டேர்டெவில்ஸ் அணி.

இரு அணிகளுக்கும் இடையே டெல்லியில் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அடுத்து ஆடிய டெல்லி 19.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்களை எடுத்து. வெற்றி பெற்றது.



நாணயச் சுழற்சி வென்ற டில்லி, முதலில் பந்து வீசத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத்தின் தொடக்க வீரர் வோனர் 21 பந்துகளில் 4 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அவர் முகமது சமி பந்துவீச்சில் போல்டானார்.

அவரைத் தொடர்ந்து கேன் வில்லியம்ஸன் களத்துக்கு வர, மறுமுனையில் நின்றிருந்த ஷிகர் தவான், 17 பந்துகளுக்கு 4 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அமித் மிஸ்ரா பந்துவீச்சில் ஷ்ரேயாஸ் ஐயரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த யுவராஜ் சிங் அதிரடி காட்டினார். அவர் 34 பந்துகளில் 7 பவுண்டரி, ஒரு சிக் ஸருடன் அரைசதம் கடந்தார். இந்நிலையில் கேன் வில்லியம்ஸன் முகமது சமி பந்துவீச்சில் கிறிஸ் மொரிஸிடம் பிடி கொடுத்தார். அவர், 24 பந்துகளில் தலா ஒரு பவுண்டரி மற்றும் சிக்ஸருடன் 24 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

அவரைத் தொடர்ந்து ஹென்ரிக்ஸ் களம் காண, 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்தது ஹைதராபாத். யுவராஜ் சிங் 41 பந்துகளில் 11 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட 70 ஓட்டங்களுடனும், ஹென்ரிக்ஸ் 18 பந்துகளில் 2 பவுண்டரி அடித்து 25 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

டெல்லி தரப்பில் முகமது சமி 2, அமித் மிஸ்ரா 1 விக்கெட் எடுத்தனர்.

**டெல்லி வெற்றி:**

இதையடுத்து 186 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்கு டன் களம் கண்ட டெல்லி அணியில், தொடக்க வீரர் சஞ்சு சாம்சன் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். உடன் வந்த கருண் நாயர் 39 ஓட்டங்களுக்கு அரங்கு திரும்பினார். தொடர்ந்து வந்த ரிஷப் பந்த் 20 பந்துகளில் 4 பவுண்டரி ஒரு சிக்ஸருடன் 34, அடுத்து வந்த ஷ்ரேயாஸ் ஐயர் 25 பந்துகளில் 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 33 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

அவர்களை அடுத்து வந்த கோரே அண்டர்சன் சற்று அதிரடி காட்டினார். அவரும், கிறிஸ் மொரிஸும் இணைந்து அணியை வெற்றிக்கு வழி நடத்தினர்.

19.1 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 189 ஓட்டங்களைப் பெற்றது டெல்லி அணி. அண்டர்சன் 24 பந்துகளுக்கு 2 பவுண்டரி, 3 சிக்ஸர்கள் என 41 ஓட்டங்களும், கிறிஸ் மொரிஸ் 7 பந்துகளுக்கு தலா ஒரு பவுண்டரி மற்றும் சிக்ஸர் என 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஹைதராபாத் தரப்பில் முகமது சிராஜ் 2, புவனேஸ்வர் குமார், சித்தார்த் கௌனேஸ் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## ஓட்டங்களை வாரி வழங்கிய பங்களாதேஷின் பந்து வீச்சாளர்களுக்கு 10 ஆண்டுகள் தடை



பங்களாதேஷில் சமீபத்தில் நடந்த உள்ளூர் போட்டியான டாக்கா 2 ஆவது டிவிஷன் லீக் கிரிக்கெட்டில், பந்து வீச்சா ளர் வேண்டுமென்றே ஓட்டங்களை வாரி வழங்கிய சம்பவம் பலத்த சர்ச்சையை கிளப்பியது.

ஆக்சியம் கிரிக்கெட்டர்ஸ் கழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் லால்ம தியா கழக பந்து வீச்சாளர் சுஜோன் முக மது 4 பந்தில் மொத்தம் 92 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். இதில் 15தவறான பந்துகளையும், 13 அகலப் பந்துகளையும் அவர் வீசியமையும் அடங்கும். இவை அனைத்தும் பவுண்டரிக்கும் ஓடின. விக் கெட் கீப்பர் எந்த பந்தையும் பிடிக்க வில்லை. நடுவரின் ஒருதலைப்பட்சமான தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகை யில் இவ்வாறு நடந்து கொண்டார்கள் என தெரிய வந்தது.

இதேபோல் நடுவருக்கு தங்களது எதிர்ப்பை காட்டும் விதமாக பியர் பைட் டாஸ் ஸ்போர்ட்டிங் கிளப் பந்துவீச்சாளர் தஸ்னிம் ஹசன் ஓர் ஆட்டத்தில் உதிரி களை அள்ளி தெளித்ததோடு, 7 பந்தில் 69 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

இது குறித்து விசாரணை மேற்கொண்ட பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி பந்து வீச்சாளர்கள் சுஜோன் முகமது, தஸ்னிம் ஹசன் ஆகியோருக்கு தலா 10 ஆண்டுகளும், அவர்களது அணியின் தலைவர்கள் பயிற்சியாளர், மேலாளர்களுக்கு தலா 5 ஆண்டுகளும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விரு கழகங்களுக்கும் உள்ளூர் போட்டிகளில் பங்கேற்க கால வரையின்றி தடையும் விதிக்கப்பட்டு இருக்கிறது.

அந்தப் பந்து வீச்சாளர் அணி நிர்வா கத்தின் உத்தரவு இன்றி இவ்வாறு செய் திருக்க வாய்ப்பில்லை என்பதால் அணி கள் மீதும் நடவடிக்கை பாய்ந்திருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கூறியுள்ளது.

## மேற்கிந்திய தீவுடனான டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் முன்னிலை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதி ரான இரண்டாவது டெஸ்டில் அசார் அலி சதம் அடிக்க பாகிஸ்தான் முன் னிலை பெற்றது. பாகிஸ்தானின் மிஸ்பா 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென் றுள்ள பாகிஸ்தான் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் வென்றது. இரண்டாவது டெஸ்ட் பார்படோஸில் நடக்கிறது. இந்த டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 312 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், பாகிஸ் தான் அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கு 172 ஓட்டங்களை எடுத்திருந்தது. அசார் அலி (81), அணித் தலைவர் மிஸ்பா (7) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

**அசார் சதம்**

மூன்றாம் நாள் ஆட்டத்திலும் அசார் அலி சிறப்பான செயற்பாட்டை வெளிப் படுத்தினார். இவருடன் இணைந்து மிஸ்பாவும் ஓட்டக் குவிப் பில் ஈடுபட்டார். டெஸ்ட் அரங்கில் அசார் அலி 13ஆவது சதம் கடந்தார்.



இவர் 105 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஹோல்டர் பந்தில் ஹோப்பிடம் பிடி கொடுத்த மிஸ்பா 99 ஓட்டங்களில் ஆட்ட மிழந்து, சத வாய்ப்பைப் பறிகொடுத்தார்.

அசாத்-சபிக் (15) ஏமாற்றினார். கேப்ரியலின் 'வேகத்தில்' சர்பராஸ் அகமது (9), சகாப் கான் (16) சிக்க, பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 393 ஓட்டங்களுக்கு முழுதாக ஆட்டமி ழந்து 81 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் அதிகபட்சமாக கேப்ரியல் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின், இரண்டாவது இன்னிங்ஸை துவக்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு பாவெல் (8) ஏமாற்றினார். மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில், இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக் கெட்டுக்கு 40 ஓட்டங்கள் எடுத்து, 41 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தது. மேற்கிந்தியத் தீவுகள் அணி கிரெய்க் பிராத்வைட் (8), ஹெட்மயர் (22) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இத்தொடரின் முதல் போட்டியின் (ஜமைக்கா) முதல் இன் னிங்ஸில் 99 ஓட்டங்களை எடுத்து சத வாய்ப்பை இழந்த மிஸ்பா, இரண்டாவது போட்டியிலும் இதே போல சதத்தை பறிகொடுத்தார். இதன் மூலம், டெஸ்ட் அரங்கில் 99 ஓட்டங் களில் அதிக முறை (3) ஆட்டமிழந்த வீரரானார் அவர்.

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்வி முற்றாகப் பாதிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்று 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த விடயம் குறித்துத் தெரிய வருபவை வருமாறு:-

மேற்படி ஆசிரியருக்கு வயது 26. யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்தவர்.

இவரும் இன்னும் சுமார் 14 யாழ்ப்பாண ஆசிரியர்களும் அனலைதீவில் வீடுகளில் வாடகைக்குத் தங்கியிருந்து அங்குள்ள பாடசாலைகளில் பணியாற்றி வந்துள்ளனர்.

மேற்படி இளம் ஆசிரியர் அனலைதீவில் உள்ள ஒரு பாடசாலையில் தம்மிடம் கல்வி பயிலும் தரம் 11 மாணவியிடம் தமது காதலை வெளிப்படுத்தினாராம்.

அந்த மாணவி அதற்கு இணக்கம் தெரிவிக்க மறுத்தமையுடன் விடயம் அடங்கி விட்டதாகக் கருதப்பட்டது.

ஆனால், சம்பந்தப்பட்ட ஆசிரியர், அங்கு ஏற்கனவே ஆசிரியராகப் பணி புரிந்து பின்னர், அரசியல்வாதியாக மாறிய ஒருவரின் நண்பர் என்ற காரணத்தால், மாற்று அரசியல் தரப்பு மேற்படி இளம் ஆசிரியருக்கு எதிராக இந்த விடயத்தை ஊதிப் பெருப்பித்துச் சன்னதம் ஆடியதாகக் கூறப்படுகின்றது.

நேற்று முன்தினம் திடீரெனத் திரண்ட அக்குறிப்பிட்ட இளைஞர் குழுவினர் அனலைதீவுக்கு வெளியில் இருந்து வந்து அனலைதீவில் தங்கியிருந்து ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அனைவரையும் மிரட்ட முனைந்திருக்கின்றது.

எனினும், சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களும் பெற்றோரும் பாடசாலைகளில் மேற்படி அனைத்து ஆசிரியர்களுடனும் பாதுகாப்பாகத் தங்கியிருந்து, காப்பாற்றி, நேற்றுக் காலை அவர்களை ஊர்காவற்றுறைக்குப் பொலிஸாருடன் அனலைதீவிலிருந்து அனுப்பி வைத்தனர்.

ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்விப்பணிமனைக்கு நேற்றுச் சமுகம் தந்த அந்த ஆசிரியர்களும் அங்கு ஒப்பமிட்டுவிட்டுப் பணிமனையிலேயே கடமை நேரம்வரை நின்றனர். அனலைதீவுக்குப் பணியாற்றத் தாங்கள் இனிப் போகமாட்டார்கள் என்றும், அங்கு போகத் தாங்கள் அச்சப்படுகின்றனர் என்றும் அவர்கள் கல்வி அதிகாரியிடம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட இளம் ஆசிரியரைக் கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவர் 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகம், சம்பந்தப்பட்ட மாணவி, அவரின் பெற்றோர் எனப் பல தரப்பினரிடமும் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர் எனத் தெரிகின்றது.

இந்த ஆசிரியர் அண்மையில்தான் தம்பாட்டியிலிருந்து அனலைதீவுக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டவர் என்றும் கூறப்பட்டது. (உ)

## நாமலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட ஐந்து பேருக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

நீதிபதி பியசேன ரணசிங்க இந்த உத்தரவை விடுத்தார். (உ)

## குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களில் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்களைப் பதவி விலக்க முதலமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வலியுறுத்தியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, மாகாண சபையின் செற்பாடுகள் மற்றும் இன்றைய நிலைமைகள் குறித்துக் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்திருந்த நிலையில், குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனால் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அந்த விசாரணைக் குழு சபையின் உறுப்பினர்களிடம் முறைப்பாடுகளையும் அவர்களது கருத்துக்களையும் கேட்டிருந்தது. இதற்கமைய விசாரணைகளையும் கடந்த பல மாதங்களாக அவ்விசாரணைக் குழு மேற்கொண்டு வந்திருந்தது. இந்நிலையில் இந்த விசாரணைகள் முடிவடைந்து, தற்போது விசாரணை அறிக்கைகள் வெளிவர இருக்கின்றன.

அதுவும் இந்த வாரத்திற்குள் இந்த அறிக்கைகள் வெளிவரலாம் என்று நம்புகின்றேன். அவ்வாறு அறிக்கைகள் வெளிவருகின்றபோது அதனை முதலமைச்சர் சபையில் சமர்ப்பிப்பார்.

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் அந்த அறிக்கையில் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருந்தால் முதலமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதாவது, குறித்த அமைச்சர்களை முதலமைச்சர், பதவி நீக்கம் செய்யவேண்டும். இதனையே நாங்கள் வலியுறுத்துவோம். – என்றும் தவராசா தெரிவித்தார்.

## வலிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பணிப்பாளராக நியமிக்கும்படி உயர்நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

வடக்கு மகாணசபையின் அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமையத் தமக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை ஆட்சேபித்து சந்திரராஜா சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் நேற்று இந்த உத்தரவை விடுத்தது.

கல்வி நிர்வாக சேவையில் தரம் I தகுதியில் உள்ள தம்மை, தமது விருப்புக்கு மாறாக வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, அந்தப் பதவிக்கு தரம் II நிலையில் உள்ள ஒருவரை நியமித்தமை தவறு என்றும் தமது மனுவில் சந்திரராஜா சுட்டிக்காட்டியிருந்தார்.

வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கு உரிய அதிகாரத்தை வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை தனது கைகளில் எடுத்துக் கொண்டு இந்த இடமாற்றத்தை வழங்கியமை தவறு என்றும் அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வாயைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேலும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களை இந்நாளில் நினைவு கூரும் வகையில் அவர்களுக்கான அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

யாழ். ஊடக அமையத்தின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு ஊடக அமைப்புக்கள் இணைந்து கொண்டன.

நேற்று நண்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள – கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவுத் தூபிக்கு முன்னால் ஒன்று கூடிய ஊடகவியலாளர்கள் அங்கு அஞ்சலி நிகழ்வுகளை நடத்தினர்.

அங்கு கூடியிருந்த அரசியல் பிரமுகர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் அனைவரும் தூபிக்கு முன் தீபங்களை ஏற்றியும், மலர் தூவியும் அஞ்சலியைச் செலுத்தினர்.

அதன்பின்னர், யாழ். நகரில் அமைந்துள்ள பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக ஒன்று கூடிய ஊடகவியலாளர்கள், அங்கு ஓர் அடையாளப் போராட்டத்தை நடத்தினர்.

வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் – ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும், ஊடக அடக்கு முறை நிறுத்தப்பட வேண்டும், படுகொலைகள், காணாமல் ஆக்கப்படல் போன்ற ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற சாரப்பட கோசமிட்டனர்.

இப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், வட மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன் மற்றும் தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கட்சியின் பிரதிநிதிகள் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## சஜினுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயணத் தடை நீதி மன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆடிகல இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

'மிஹின் லங்கா' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் அரசுக்கு சொந்தமான 88 கோடியே 30 லட்சம் ரூபாவை மோசடி செய்தார் என இவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முறையான கேள்விப் பத்திர நடைமுறை இன்றி சிங்கப்பூர் தனியார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து 'மிஹின்லங்கா' நிறுவனத்திற்கு பொருள்கள் கொள்வனவு செய்தமையால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டது எனத் தெரிவித்து லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டுப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரமசிங்க அறிவித்துள்ளார்.

நேற்றுத் தொடக்கம் இடம்பெற்று வரும் நாடாளுமன்ற அமர்வில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

தொடர்ந்தும் பிரதமர் கருத்து தெரிவிக்கையில் –

நாட்டில் சிறப்பு இராணுவம் அமைப்பதற்கு தற்போது எந்தத் தேவையும் இல்லை. கடந்த அமைச்சரவையின் போது குப்பைப் பிரச்சினை தொடர்பிலேயே கலந்துரையாடப்பட்டது. பொன்சேகாவைப் பற்றியல்ல – என ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

சரத்பொன்சேகாவைக் கூட்டுப்படைகளின் தளபதியாக நியமிப்பது தொடர்பில் எதுவும் அமைச்சரவையில் பேசப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அரசியல் நோக்கில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் போது மக்களுக்கான அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பதற்காக அனைத்துத் தரப்புக்களையும் உள்ளடக்கிய செயலணியை நிறுவ வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

## சுன்னாகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொலை செய்தனர் எனத் தெரிவித்து யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பத்தாண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

இந்த வழக்கு இறுதித் தொகுப்புரைக்காக நேற்று பிற்பகல் யாழ்.மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

மாலை 4.35 மணியளவில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

தீர்ப்பில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஆறு பொலிஸ் அதிகாரிகளுக்கும் பத்தாண்டு கடூழியச்சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், கட்டத்தவறின் ஓர் ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையும், ஒவ்வொரு எதிரியும் தலா 2 இலட்சம் ரூபா நஷ்டஈடும், கட்டத்தவறின் ஓர் ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

## காங்கேசன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விய இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கி (Exim Bank) வழங்குவதற்கு இணக்கம் தெரிவித் துள்ளது.

அதனடிப்படையில் இந்திய ஏற்றுமதி – இறக்குமதி வங்கியுடன் கலந்துரையாடி ஒப்புதல்களைப் பெற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கே இவ்வாறு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பு வழிகாட்டல் குழு நேற்றுப் பிற்பகல் பிரதமர் ரணில் தலைமையில் கூடியது.

பெரும்பாலும், வழிகாட்டல் குழுவில் இடம்பெறும் அனைத்துத் தரப்பினர்களினதும் பிரதிநிதிகள் நேற்றைய கூட்டத்துக்குச் சமுகம் தந்திருந்தனர்.

அச்சமயம், புதிய அரசமைப்பு நகல் தொடர்பான வழிகாட்டல் குழுவின் கலந்துரையாடல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையின் வரைவு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நகல் வரைவில் அதிகாரப்பகிர்வு பற்றிய விடயங்களே இடம்பெற்றிருந்தன.

அதனை அப்படியே இடைக்கால அறிக்கையில் இடம்பெறச் செய்யலாம் என்று தெரிவித்த சு.க.வின் பிரதிநிதியான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தேர்தல் சீர்திருத்தம் பற்றிய விடயங்கள் ஏன் உள்ளடக்கப்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

அதேபோல நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது. ஆனால் அந்த விடயம் இந்த வரைவில் ஏன் இடம்பெறவில்லை என்று ஜே.வி.பி. பிரதிநிதிகள் கேட்டனர்.

இந்த இரு விடயங்களும் – தேர்தல் சீர்திருத்த முறைமைகள் மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கல் ஆகியவை – ஏற்கனவே விரிவாக ஆராயப்பட்டு அறிக்கை வடிவத்தில் தயாராக இருக்கின்றன என்று கூட்டத்தில் கூறப்பட்டது.

ஆகவே, அவற்றையும் உள்ளடக்கிய அறிக்கை வடிவத்தின் பிரதி இன்று (வியாழக்கிழமை) வழிகாட்டல் குழுவின் பிரதிநிதிகள் அனைவருக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கையின் வரைவை இறுதி செய்வதற்காக வழிகாட்டல் குழுவின் 'மரதன்' அமர்வுகளை நடத்தவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் பிற்பகலிலும், 25 ஆம் திகதி காலையிலும், பிற்பகலிலும், 26 ஆம் திகதி காலையிலுமாக ஐந்து தொடர் அமர்வுகளை நடத்தி, விடயத்தை ஒப்பேற்றி, இடைக்கால அறிக்கையை அரசமைப்பு கவுன்ஸிலான நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடுகளின் இரட்டைக் குடியுரிமை பெற்றிருந்தமையால் அவரது எம்.பி.தெரிவு செல்லுபடியற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பால் அவர் பதவியிழக்கின்றமையை அடுத்து, அந்த வேட்பாளர் பட்டியலில் விருப்பு வாக்கு அடிப்படையில் அடுத்த நிலையில் இருக்கும் முன்னாள் அமைச்சர் பியசேன கமகே எம்.பியாகப் பதவியேற்பார் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(விரிவான செய்தி 07 ஆம் பக்கத்தில்) (உ)

# போர் பாதித்த தாயகத்தை மீட்டெடுக்க ஆர்வம் காட்டும் புலம்பெயர் தமிழர்கள்!

## கனேடிய ஊடகம் தகவல்

இலங்கையில் 30 வருடங்களாக நீடித்த போர் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டதன் பின்னர், தாயகத்தை மறுசீரமைப்புச் செய் வதில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்வமாக உள்ளனர் என்று கனேடிய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளி யிட்ட தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ரொன்டோவை தளமாகக் கொண்ட தமிழ் வர்த்தகர்கள், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர்.

போரால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளைப் புனரமைப்பதுடன் இலங்கையில் சமகால அரசுக்கு ஆதரவை வழங்குவதும் முதலீட்டாளர்களின் நோக்கமாகும்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் நாட்டிலுள்ள வர்த்தகர்களுடன், ரொன்டோ முதலீட்டாளர்கள் பேச்சுகளை நடத்தியுள்ளனர்.

தாயகத்தில் மேற்கொண்ட போருக்கு அரசு முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என்பதை வலியுறுத்திய தமிழ் முதலீட்டாளர்கள், இன்னுமொரு யுத்தம் இடம்பெறுவதை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் கடந்த 23 ஆம் திகதி ஸ்கார்பரோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, கனடா இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் இணைத் தலைவரான குலா செல்லத்துரை இதனை வலியுறுத்தினார்.

இதேவேளை, அந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ஒ கிரில் ஹவுஸின் குழுவின் இணைத் தலைவரான ஸ்டான் முத்துலிங்கம் கருத்து வெளியிடுகையில்:-

புலம்பெயர்ந்து வாழும் நாம் 35 வருடங்களாகப் போராட்டத்துக்கு உதவி புரிந்தோம். ஆனால், 2009 இல் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதுடன், விடுதலைப் புலிகளையும் இலங்கை அரசு தோற்கடித்தது.

இறுதிக்கட்டப் போரில் மனித உரிமை மீறல்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளை நிறுத்துமாறு வலியுறுத்தி இலங்கையின் பொருள்களை புறக்கணித்தோம். இதற்காக ரொரொன்டோவின் அதிவேக நெடுஞ்சாலையை வழிமறித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால், இறுதி இராணுவப் பிரசாரத்தை மேற்பார்வையிட்ட அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவால் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின்னர் ரொரொன்டோ புலம் பெயர்ந்த உறவுகள் கணிசமாக முன்னேற்றம் கண்டனர்.

தற்போது இலங்கை பெரியளவில் முன்னேற்றங்களை அடைந்து வருவதை அங்கு செல்லும்போது காண முடிகிறது.

கடந்த கால அரசுகள் தமிழர்களை அடக்கி ஆழ்வதில் குறியாக இருந்தன. தமிழர்கள் மீது அதிகாரங்களைத் திணித்தனர். ஆனால்,தற்போது அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.


வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப புலம்பெயர் தமிழர்களின் உதவியை சமகால ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ளார். தற்போதைய நிலையில் இந்த அரசைப் பலப்படுத்த வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

கனடாவில் கற்றுக் கொண்ட செயற்பாட்டு பொருளாதாரம் பற்றிய எங்களுடைய அறிவு தாயகத்துக்குத் தேவை.

போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அதிலிருந்து மீட்க முடியும். அவர்களின் வாழ்வை மேம்படுத்த எங்களால் முடியும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் மேற் கொள்ள முதலீடுகள் தொடர்பில் 21 கனேடிய முதலீட்டாளர்கள், அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## நாளை மின் தடை



நாளை வெள்ளிக்கிழமை காலை 800 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்** வங்காலையிலிருந்து நானாட்டான் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஊடகவியலாளருக்கு யாழ்.நகரில் கருத்தரங்கு

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தகவல் பெறும் உரிமைச்சட்டம் தொடர்பாக யாழ்பாணம், மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெறும்.

தற்போது நடைமுறையில் இருந்து வரும் தகவல் அறியும் சட்டம் தொடர்பாகவும் அதன் உள்ளார்ந்த விடயங்கள் மற்றும் இச்சட்டம் ஊடகவியலாளர்களுக்குப் பயன்படும் முறைகள் தொடர்பில் கருத்துரைகள் இடம் பெறும்.

ஏற்கனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, கம்பஹா கண்டி, குருநாகல் உட்பட பல மாவட்டங்களில் ஊடக வியலாளர்களுக்கு இவ்வாறான கருத்துரைகள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-19)

## இந்து சமுத்திரத்தில் சேரும் கழிவுகளால் பல்வேறு தீவுகள் பாதிக்கப்படும் அபாயம்

### பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எச்சரிக்கை

கொழும்பு, மே 04

இந்து சமுத்திர நீரில் கழிவுகள் பரவுவதன் காரணமாக இலங்கை உள்ளிட்ட பல்வேறு தீவுகளுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக் கழகத்தின் பூகோளவியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அண்மையில் வெளியிடப் பட்ட வரைபடம் ஒன்றில் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் சில நதிகளிலிருந்து சமுத்திரத்தில் சேரும் கழிவுகளால், இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்து சமுத்திர நாடுகள், சர்வதேச சட்டத்துக்கமைய செயற்பட வேண்டும் என்று பேராசிரியர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

## நாட்டில் வறட்சியான காலநிலை சிக்கனப்படுத்துங்கள் தண்ணீரை!

### அனர்த்த நிவாரண சேவை அமைச்சர் யாப்பா வேண்டுகோள்

கொழும்பு, மே 04


நாட்டில் வறட்சியான காலநிலை ஏற்பட்டுள்ளதால் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமேல் மாகாணத்தில் தற்போது மகா ஓயாவை அண்டிய பிரதேசங்களில் நீருக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

நீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு எவராலும் உரிய தீர்வை முன்வைப்பது கடினம்.

இதேவேளை, இடர்முகாமைத்துவ நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையின் அடிப்படையில் வறட்சி காரணமாக வடக்குப் பகுதி மக்களே அதிகம் பாதிக் கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.



இதனடிப்படையில், வடக்கு பகுதியில் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் பேரும் கிழக்கு மாகாணத்தில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள் ளனர்.

இந்நிலையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிதண்ணீரைவழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இடர்முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி குறிப்பிட்டுள்ளார். (எ)

## ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சிநெறி ; 25 மாணவர் சித்தி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் யாழ்.குருகுலத்தில் நடைபெற்ற ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சிப் பரீட்சையின் பெறுபேறுகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சையில் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.

இந்த ஆன்மீகப் பிரசாரகர்கள் 25 பேரும் இந்து அறநெறிப் பாடசாலைகளில் நடைபெறும் குரு பூசை நிகழ்வுகளிலும் விழாக்களிலும் சொற்பொழிவாற்றவுள்ளார்கள்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் விழா ஒழுங்கு செய்து இவர்களுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படும் எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சித்தியபெற்ற மாணவர்கள் வருமாறு-

கே.ஆதித்தன், ப.அச்சுதராஜா, கு.கந்தபாலன், து.குமரநாதன், சா.ரமேஸ்குமார், அ.துஸ்யந்தினி, இ.தர்சிந்தா, ந.சறோஜாதேவி, சிவராசா வனிதா, கு.நிதர்ஷனி, ம.பகீரதன், தி.தனிஸ்ஷா. க.மோகனதாசன், கா. ராஜ்மோகன், செ. சுகீர்த்தனா, ச.லஷ்சிகா, ஈ.நவிஷா, இ.சஜிதா, சி.உமாசுதன், எஸ்.கிருஸ்ணராஜா, ந.இந்திரா, சு.சுகுமார், க.கனகதுர்க்கா; கா, ம.சசினா, வி.மகாதேவன்.

இந்த 25 பேரும் அதிவிசேட சித்தி, விசேட சித்தி, திறமைச்சித்தி, சாதாரண சித்தி என்ற வகையில் சித்திபெற்றுள்ளனர். (இ)

## பொலித்தீன் அற்ற வலயமாகப் பிரகடனம் கொழும்பு தேசிய அருங்காட்சியக வளாகம்

கொழும்பு, மே 04

கொழும்பு தேசிய அருங்காட்சியக வளாகம் பொலித்தீன் அற்ற வலயமாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

தேசிய அருங்காட்சியகத்தை பார்வையிடச் செல்வோர் முறையான விதத்தில் கழிவகற்றும் பணிகளை மேற்கொள்ளாமையால், அருங்காட்சியக வளாகத்தில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

பொலித்தீன் பிளாஸ்டிக் போத்தல்கள், றெஜிபோம் என்பனவற்றை எடுத்து வர வேண்டாம் என்று அருங்காட்சியக நிர்வாகிகள் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மருதனார்மடத்தில் சுந்தர காண்ட மங்கல யக்ஞப் பெருவிழா



இணுவில், மே.04

யாழ்ப்பாணம் இணுவில் - மருதனார் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய சுந்தர காண்ட மங்கல யக்ஞப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பூர்த்தியடையவுள்ளது.

இதில் தினமும், காலை, மாலை ஸர்க்க பாராயணங்களும் திரவிய ஹோம வழிபாடுகளும் இடம்பெற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆன்மீக உரையும், மதியம் ஒரு மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீராம பட்டாபிஷேக விழா இடம்பெறும்.



சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ். ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நலன் விரும்பிகள் நேற்று யாழ். நகரப் பிரதான பஸ் நிலையம் முன்பாக வாயைக் கறுப்புத் துணியால் கட்டிப் போராட்டம் நடத்துகின்றமையையும் அதன் பின்னர் அங்கு இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரை வழங்குகின்றமையையும் படங்களில் காணலாம்.




சர்வதேச ஊடகத் தினத்தை ஒட்டி யாழ். ஊடக அமையம் அறிக்கை

# ஊடகப் பணியாளர் படுகொலைகளின் சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்!

## அப்போதுதான் உண்மையான சுதந்திரம் நிலைநிறுத்தப்படும்

(எஸ்.நிதர்ஷன்)

படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். இப் படுகொலைகளுக்குக் காரணமான குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரைக்கும் ஊடகச் சுதந்திரம் என்பது பேச்சளவில் மட்டுமே இருக்கும்.

- இவ்வாறு, ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உலக ஊடக சுதந்திர தினம் இன்று (நேற்று) சர்வதேசம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து நீதி கிடைக்காத சூழலில் இவ்வாண்டும் ஊடக சுதந்திர தினம் முன்னெடுக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்கள் மீதான படுகொலைகள், காணாமல் போகச்செய்தல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத வரை இலங்கையில் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்த முடியாது என்பது யாழ். ஊடக அமையத்தின் தெளிவான அபிப்பிராயமாகும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படாது இச்சூழலில் சுதந்திரமாக நடமாடும் வரை ஊடகவியலாளர்கள் தம்மைச் சுயதணிக்கைக்கு உட்படுத்திக்கொள்ளும் துர்ப்பாக்கிய சூழல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

கடந்த அரசுகளின் ஆட்சியின் கீழ் இலங்கை முழுவதும் 44 சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

அதில் பெரும்பான்மையாக வட - கிழக்கில் மட்டும் சுமார் 41 தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டும் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

இவர்களுள் தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் குறித்த அடிப்படை நீதி விசாரணைகள் புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட, ஆரம்பிக்கப்படாதமை இந்த அரசின் பொறுப்புக் கூறலைக் கேள்விக்குட்படுத்துகிறது.

புதிய அரசின் ஆட்சியின் கீழ் ஊடகவியலாளர்கள் மீதான பகிரங்கப் படுகொலைகள் எவையும் இடம்பெறவில்லை. அதே போன்று பகிரங்கமாக ஊடகவியலாளர்கள் எவரும் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்படவில்லை. கொல்லப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் கடத்திக் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ள கேலிச்சித்திரக் கலைஞரும், பத்தி எழுத்தாளருமான பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு இடம் பெற்று வருகின்றன.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவை வரவேற்புக்குரியவையே. எனினும், இவற்றை மட்டும் உலகுக்குக் காண்பித்து இந்த நாட்டில் இடம் பெற்ற ஏனைய தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் பொறுப்புக் கூறாது இந்த அரசு நழுவ முடியாது. இதற்கான பொறுப்புக் கூறலில் இருந்து தப்பிக்கொள்ள அரசுக்கு இடமளிக்க முடியாது என்பதே இலங்கையில் ஒட்டுமொத்த ஊடகவியலாளர்களின் நிலைப்பாடாகும்.

இச்சூழலில் ஊடக சுதந்திர தினமான இன்று - படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்களை - யாழ். ஊடக அமையம் நினைவு கூருகின்றது.

அத்துடன், எந்த அழுத்தங்களும் இன்றி தகவல்களைத் திரட்டவும் அவற்றை அறிக்கையிடவும் உள்ள உரிமையை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும் எனவும் யாழ். ஊடக அமையம் வலியுறுத்துகிறது.

அத்துடன், படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். குற்றமிழைத்தோர் தண்டிக்கப்பட வேண்டும் என மீண்டும் ஒருமுறை யாழ். ஊடக அமையம் அழுத்தமாகக் கோரிக்கை விடுக்கிறது. - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு கையளிக்கவும் யாழ். ஊடக அமையத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# ஐ.நா. அமைப்பு திறமையாகச் செயற்பட்டிருந்தால் வடக்கில் பல்லாயிரம் பேரின் சாவு நடந்திருக்காது!

## ஐ.நா. அதிகாரியிடமே கூறினார் முதல்வர் விக்னேஸ்வரன்



ஐக்கிய நாடுகள் அமைப்பு திறமையாகச் செயற்பட்டிருந்தால் வடக்கில் பல்லாயிரக்கணக்கானோர் இறந்திருக்க மாட்டார்கள் என்று ஐ. நா வின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கான அதிகாரியிடம் வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

நேற்று முதலமைச்சரைச் சந்தித்த ஐ. நாவின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கான அதிகாரியிடம் இவ்வாறு தெரிவித்தார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஐக்கிய நாடுகள் சபை மத்திய அரசுடன் மட்டும் தொடர்புகளை வைத்துக்கொண்டு செயற்படுகின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மத்திய அரசு ஏற்கனவே மாகாணத்தைப் புறந்தள்ளித் தாம் நினைத்ததைச் செயற்படுத்தி வருகின்றது.

இனிவரும் காலங்களிலாவது ஐ. நா. இதனைத் திருத்தி மாகாண அரசுடனும் தொடர்புகளைப் பேணவேண்டும்.

குறிப்பாக, போர் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை அமைப்புக்கள் சிறப்பாகச் செயற்பட்டு, மத்திய அரசின் செயற்பாட்டில் தலையிட்டிருந்தால் இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களை இறக்காமல் காப்பாற்றி இருக்கலாம். இனியும் அவ்வாறான ஒரு தவறை ஐ.நா. செய்துவிடக்கூடாது என வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள [illegible] அச்சகத்தில் 04.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.